தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.12.2013**

## தமிழகம், புதுவையில் 48 மணிநேரத்துக்கு கனமழை பெய்யும்

தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த 48 மணிநேரத்துக்கு கனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் கூறியது:

இலங்கை மற்றும் தமிழகக் கடல்பகுதியில் சனிக்கிழமை உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை அதேஇடத்தில் தொடர்ந்து நிலை கொண்டுள்ளது. இது வலுப்பெறும்வாய்ப்புள்ளதாலும் மேற்கு நோக்கி நகரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு மேற்கு நோக்கி நகர்ந்து வந்தால் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் கனமழைக்கான வாய்ப்புள்ளது.

இந்நிலையில் தென்கிழக்கு வங்கக்கடலில் ஞாயிற்றுக்கிழமைகாலை உருவான காற்றழுத்தத் தாழ்வுநிலை மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தாழ்வுநிலை மேற்குநோக்கி நகரக்கூடும் என்பதால் தமிழகம் மற்றும் புதுவையில் பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் கன மழை பெய்யும். அடுத்த 48 மணிநேரங்களுக்கு மழை நீடிக்கும்.

தற்போது தமிழகத்தின் அருகே வங்கக்கடலில் 2 காற்றழுத்தத் தாழ்வுநிலை உருவாகியிருப்பதாலும் அவை மேற்கு நோக்கி நகர்ந்துவரும்பட்சத்தில் தமிழகத்தில் குறிப்பாக தென்மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் பல இடங்களில் கனமழை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும். ஓரிரு இடங்களில் மழை பெய்யும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 வரையிலான 24 மணிநேரத்தில் தமிழகத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டர்): திருச்செந்தூர் - 110, ராமநாதபுரம் - 60,

சாத்தான்குளம் - 50, மகாபலிபுரம் - 40, ஏற்காடு - 30, கல்பாக்கம், உத்திரமேரூர், - 20, சிதம்பரம், மாதவரம், நெய்வேலி, திருவையாறு, பரங்கிப்பேட்டை, சிவகங்கை, எண்ணூர், மயிலாடுதுறை, ஓமலூர் - 10.

## குளிரூட்டும் வசதி இல்லை: இந்தியாவில் ஆண்டுதோறும் ரூ.13,300 கோடி பழம், காய்கறிகள் வீண்

குளிரூட்டும் வசதி இல்லாததால் இந்தியாவில் ஆண்டுதோறும் ரூ.13,300 கோடி மதிப்புள்ள பழங்களும், காய்கறிகளும் வீணாவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் எமர்சன் நிறுவனங்களில் ஒன்றான "இந்திய பருவநிலை தொழில்நுட்பவியல்' வர்த்தக நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம்:

இந்தியாவில் ஆண்டுதோறும் ரூ.44,000 மதிப்புள்ள பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்கள் ஆகியவை வீணாகின்றன.

அவற்றில், பழங்கள் மற்றும் காய்கறிகள் மட்டும் அவற்றின் உற்பத்தியில் 8 சதவீதம் கழிவாகிப் போகின்றன. இவ்வாறு வீணாகும் இவ்விரு இயற்கை உணவுகளின் மதிப்பு ரூ.13,300 கோடியாகும்.

இதற்கு முக்கிய காரணம் உற்பத்தியாளர்களிடமும், விற்பனையாளர்களிடமும் பழம் மற்றும் காய்கறிகளை முறையாகப் பதப்படுத்தும் குளிர்சாதன வசதியின்மையே ஆகும்.

இத்தகைய வசதிகளை ஏற்படுத்துவதில் முன்னேற்றம் காணப்படாததால், பெருமளவு உற்பத்தித் திறன்களை கொண்டிருக்கும் இந்தியாவில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

எனவே, வீணாகும் இயற்கை உணவுகளை சேமிக்க வேண்டியது அவசியம்.

தற்போது இந்தியா முழுவதும் 6,300 குளிர்பதனப்படுத்தும் வசதிகள் உள்ளன. அவற்றில் 30.11 மில்லியன் மெட்ரிக் டன் (இந்திய மதிப்பில் சுமார் 3.011 கோடி மெ.டன்) பொருள்களைப் பதப்படுத்தி வைக்கலாம். ஆனால், 61 மில்லியன் மெட்ரிக் டன் (6.1 கோடி மெ.டன்) அளவுக்கு உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகிறன. உணவுப்பொருள் பாதுகாப்புக்கான இலக்கை எட்டுவதற்கு, 2015-16ஆம் ஆண்டுகளில் ரூ.55,000 கோடிக்கும் மேல் முதலீடு தேவைப்படும்.

இந்தியா முழுவதும் 6,000 மெட்ரிக் டன் அளவு உணவுப் பொருள்களை சேமிக்கும் வகையில் குளிர்பதன வசதிகளை ஏற்படுத்துவதற்கான இடம் மற்றும் கட்டடங்கள் உடனடியாக தேவை என்று அந்த புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

### கரும்பு விவசாயிகள் பிரச்னை: ராஷ்ட்ரீய லோக் தளம் போராட்டம்

கரும்பு ஆலைகள் மீண்டும் செயல்படக் கோரியும், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க வலியுறுத்தியும் ராஷ்ட்ரீய லோக் தளம் கட்சியினர் உத்தரப் பிரதேச மாநிலம் முசாபர்நகரில் பல்வேறு இடங்களில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தில்லி-டேராடூன் தேசிய நெடுஞ்சாலையில் புர்காஜி, மன்சூர்பூர் மற்றும் காஸ்டோலின் ஆகிய இடங்களிலும், தில்லி-பெப்ரி நெடுஞ்சாலையில் ராம்ராஜ் என்ற இடத்திலும், காதிமா-பானிப்பட் நெடுஞ்சாலையில் மீரான்பூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்தச் சாலை மறியல் காரணமாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மாநிலத்தில் கரும்பு உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ராஷ்ட்ரீய லோக் தளம் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

### கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம்

தேனி மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி பலியான கால்நடைகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று பெரியகுளம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் ஏ. லாசர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியது:

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பெரியகுளம், ஜெயமங்கலம், எருமலைநாயக்கன்பட்டி, கீழவடகரை ஆகிய பகுதிகளில் கோமாரி நோய் தாக்கி கடந்த சில நாள்களில் 17 மாடுகளும், அரசு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 100-க்கும் மேற்பட்ட விலையில்லா ஆடுகளும் பலியாகியுள்ளன.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், நோய் தாக்கி பலியான மாடுகளுக்கு தலா ரூ.25 ஆயிரம்,

ஆடுகளுக்கு தலா ரூ.5,000 வீதம் நிவாரணம் வழங்க வேண்டும், நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று கோரி அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளேன் என்றார் ஏ. லா சர்.

### நாற்றாங்காலில் கருகல் நோய் 2-ஆம் போகம் பாதிப்பு: விவசாயிகள் கவலை

கம்பம் பள்ளத்தாக்கு கூடலூர் பகுதியில் நெல்நாற்றங்காலில் கருகல் நோய் ஏற்பட்டுள்ளதால், மீண்டும் நாற்றங்கால் அமைக்க முடியாத நிலையில் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதி லோயர்கேம்ப் முதல் தேனி பழனிசெட்டிபட்டி வரை தேனி, போடி, உத்தமபாளையம் ஆகிய வட்டங்களில் பதிவு பெற்ற 14,707 ஏக்கரில் இரண்டு போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் கடந்த வாரம் முதல் போகம் நெல் அறுபடை முடிந்து, 2ஆம் போகம் நடவு பணி துவங்கி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நடவுப்பணிகாக கடந்த 35 நாள்களுக்கு முன்பே விவசாயிகள் நாற்றங்கால் அமைத்திருந்தனர். குறிப்பாக கூடலூர் வெட்டுக்காடு பகுதிகளில் விவசாயிகள் கரினா சன்னரக விதை நெல்லை தனியார் கடைகளில் வாங்கி நாற்றங்கால் அமைத்தனர். பயிர் வளர்ந்த நிலையில் செவ்வட்டை மற்றும் கருகல் நோய் தாக்கியுள்ளது. இதனால் நாற்றுகள் வளராமல் நுனி கருகி வருகிறது. ஒரு சில விவசாயிகள் நாற்றங்காலை அழித்து, மீண்டும் ஏ.டி.டி. 45, கோ 45 நெல் விதைகளில் புது நாற்றாங்கால் அமைக்கும் பணியை துவக்கி உள்ளனர்.

2ஆம் போகம்  பிப்ரவரி மாதத்திற்குள் அறுபடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால், முக்கிய கட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையில் தண்ணீர் நிறுத்தப்படும். இதனால் பயிர்கள் கருகும் நிலை ஏற்படும், தண்ணீர் பற்றாக்குறையாலும், கடும் வெயிலிலும் விளைச்சல் பாதிப்பு அடையும் நிலை உள்ளதே விவசாயிகளின் கவலை.

இது குறித்து விவசாயிகள் கூறும்போது, வேளாண்மை துறையினர் முதல் போகம் நெல் அறுவடைக்கு முன்பே, 2-ஆம் போகத்திற்கு தேவையான விதை நெல் வழங்க முன் வரவேண்டும். ஆனால், காலதாமதம் செய்வதால் தனியார் நிறுவனத்தில் விதை நெல் வாங்கி நாற்றங்கால் அமைத்து, நோய் பாதிப்படைந்துள்ளதால், வழி தெரியாமல் உள்ளோம். அரசு விதை நெல் வழங்கி

ஆலோசனை வழங்க வேளாண்மை துறையினர் முன் வரவேண்டும் என்று கூறினர்.

### தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளின் கவனத்திற்கு...

தரமான கொப்பரை கிடைக்க 6 சதவீதத்திற்குள் ஈரப்பதம் இருக்க வேண்டும் என்று, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தெரிவித்துள்ளது.

தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான கொப்பரை கிடைக்க அறுவடைக்குப் பின் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து வாரியம் வெளியிட்டுள்ள செய்தி:

தேங்காய்கள் நன்கு முற்றிய பிறகு பறித்த பின் ஹைபிரிட் ரக வகைகளுக்கு 45 முதல் 60 நாள்களுக்குள்ளும், நாட்டு ரகங்கள் 45 முதல் 70 நாள்களுக்குள்ளும் உலர வைத்து, பின் உடைத்து வெயிலில் காயவைக்க வேண்டும்.

முதலில் மண்களத்தில் மூன்று நாள்களுக்கும், பின் கடப்பா கல்லில் சுமார் 4 முதல் 7 நாள்களுக்கும் (வெயிலின் அளவைப் பொருத்து) காயவைக்க வேண்டும். கொப்பரையின் ஈரப்பதம் 6 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும்.

பூஞ்சானத் தாக்குதல், கருப்பு, மஞ்சள் நிறமான தேங்காய்களை கழிவு செய்திட வேண்டும். தேங்காய்ப் பருப்பில் சுருக்கம் மற்றும் மடிப்பு 10 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். நன்கு உலர்ந்த பின் பருப்பில் படிந்துள்ள மணல், தூசி, சருகுகள் ஆகியவற்றை நீக்க வேண்டும்.

தேங்காய்ப் பருப்பு வெள்ளையாக இருக்க வேண்டும். உட்புறம் சவ்வுத்தாள் பொருந்திய சாக்குப் பைகளில் சேமித்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நவீன முறைப்படி, பாதுகாப்புடன் காயவைத்து, விற்பனைச் செலவுகள் இல்லாமல் கூடுதல் பயன் அடையலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைத்து யானை ஊடுருவலைத் தடுக்க ஆலோசனை

யானை - மனித மோதலைத் தடுக்கும் வகையில், கோவை

வனப்பகுதியையொட்டிய பகுதியில் தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைத்திட வனத்துறை ஆலோசித்து வருகிறது.

கோவை வனக்கோட்டத்தில் 6 வனச்சரகங்கள் உள்ளன. இதில், போளுவாம்பட்டி சரகத்தின்கீழ் வரும் தொண்டாமுத்தூர், குப்பேபாளையம் உள்ளிட்ட சுற்றுவட்டாரக் கிராமங்களில் யானைகள் நுழைந்து வருகின்றன. விளைநிலங்களில் புகும் யானைகள் வாழை, சோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்களைச் சேதப்படுத்துகின்றன.

தமிழகத்திலேயே அதிகபட்சமாக கோவை வனக்கோட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில் நூற்றுக்கு மேற்பட்டோர் யானை தாக்கி உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே காட்டு யானைகள் புகுந்துவரும் கிராமங்களில் கும்கி யானைகளை வைத்து கண்காணிப்பு செய்து வந்தனர். கும்கி யானைகள் முகாமிட்டுள்ள பகுதியைத் தவிர்த்து பிற கிராமங்களில் யானை புகுந்து வந்தன. தற்போது அப்பகுதிகளில் யானை தொந்தரவு குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் யானை -மனித மோதல் பிரச்னைக்குத் தீர்வு காணும் வழியை வனத்துறை ஆலோசித்து வருகிறது.

அதன்படி யானை வரும் வழித்தடங்களில் மற்றும் வனப்பகுதியையொட்டிய கிராமங்களில் தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது. காட்டு யானைகள் தேனீக்கள் எழுப்பும் ரீங்கார ஒலியால் எரிச்சல் அடைவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனவே, பரீட்சார்த்த முறையில் யானைகள் வரும் பாதையில் தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைத்திட வனத்துறை ஆலோசித்து வருகிறது. முதல்கட்டமாக தொண்டாமுத்தூருக்கு உள்பட்ட சுற்றுவட்டார குப்பேபாளையம் பகுதிகளில் தேனீ பெட்டிகளை வைக்க வனத்துறை முடிவு செய்துள்ளது.

தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வைப்பதன் மூலம் யானைகள் அப்பகுதியைத் தவிர்க்கிறதா, இல்லையா என்பதை தெரிந்துகொண்டு, பிற இடங்களுக்கும் தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைக்க வனத்துறை முடிவு செய்துள்ளது.

### தோட்டக்கலைப் பயிர்களுக்கான மாதிரி கிராமமாக சட்டக்கல்புதூர் தத்தெடுப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான மாதிரி கிராமமாக சட்டக்கல்புதூர் கிராமம் தத்தெடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்தி:

தமிழக அரசின் இரட்டிப்பு மகசூல், மும்மடங்கு வருமானம் என்ற இலக்கை எட்டும் வகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒரு மாதிரி கிராமத்தை உருவாக்கி, மேம்படுத்தப்பட்ட தோட்டக்கலைத் தொழில்நுட்பங்கள் அனைத்தையும் அக்கிராமத்தில் செயல் விளக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதற்காக கோவை மாவட்டம், கிணத்துக்கடவு அருகிலுள்ள சட்டக்கல்புதூர் கிராமத்தைத் தத்தெடுத்துள்ளது. தோட்டக்கலைப் பயிர்களில் மகசூலை இரட்டிப்பாக்க தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தால் வெளியிடப்பட்ட தொழில்நுட்பங்களைப் பறைசாற்றும் பல்வேறு செயல்விளக்கத் திடல்கள் இக்கிராமத்தில் அமைக்கப்பட உள்ளன.

காய்கறிப் பயிரான கத்தரியில் இரு மடங்கு மகசூலைப் பெறுவதற்காக வீரிய ஒட்டு ரகத்தைப் பயன்படுத்தி ஒட்டுக்கட்டும் புதிய தொழில்நுட்பப் பயிற்சி இக்கிராம விவசாயிகளுக்கு அளிக்கப்பட உள்ளது. பொதுவாக ஒரு செடிக்கு 5 கிலோ வரை மகசூல் கிடைக்கும் வீரிய ஒட்டு ரகத்தில், ஒட்டுக்கட்டும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் பொழுது அதன் மகசூல் 10 கிலோ வரை கிடைக்க வாய்ப்புள்ளது.மணமூட்டும் பயிரான மஞ்சளில் மகசூலில் அதிக அளவு விதைக்காக ஒதுக்கப்படுகிறது. அதை நிவர்த்தி செய்யும் வகையில், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தால் வெளியிடப்பட்ட தொழில்நுட்பமான ஒரு மொட்டுக் கொண்ட கிழங்கைப் பயன்படுத்தி குழித்தட்டு நாற்றாங்கால் முறை மூலம் உற்பத்தி செய்யும் பொழுது விதைக்கிழங்கின் அளவு குறைக்கப்பட்டு மஞ்சள் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

புதிய தொழில்நுட்பங்களை சட்டக்கல்புதூர் கிராமத்தில் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களில் செயல்படுத்தி, அப்பகுதி விவசாயிகளுக்கு இரு மடங்கு மகசூலைப் பெற தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் (பொறுப்பு) சே.மாரியப்பன் தலைமையில் திட்டமிடப்பட்டு செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### "வெங்காயம் பயிரிட ஏக்கருக்கு ரூ.7,700 கடன்'

திருவண்ணாமலை மாவட்டத்தில் வெங்காயம் பயிரிட ஏக்கருக்கு ரூ.7,700 கடன் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

வெங்காயத்தின் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பெரிய வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதையடுத்து, திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் 159 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்க கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த, வெங்காயம் பயிரிட விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தை அணுகலாம் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

### சீர்காழியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

சீர்காழி பகுதியில் சனிக்கிழமை முதல் மீண்டும் மழை பெய்ய தொடங்கியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சீர்காழி பகுதியில் சனிக்கிழமை நள்ளிரவு தொடங்கி ஞாற்றுக்கிழமை காலை வரை பரவலாக மழை பெய்தது. இதனால் புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், கடைவீதி உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் மழை தண்ணீர் தேங்கி நின்றது. எனினும், இந்த மழை சம்பா பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில நாள்களாக நிலவிய கடும் பனிப் பொழிவால் சம்பா நெற்பயிரில் குருத்து பூச்சி தாக்குதல் அதிகமாக காணப்பட்டது. இதனால் கவலையடைந்த விவசாயிகளுக்கு இந்த மழை மகிழ்ச்சியை அளித்துள்ளது. எடமணல், வருஷபத்து, குடமுருட்டி, வேட்டங்குடி, மகராஜபுரம், நல்லநாயகபுரம் உள்ளிட்ட பகுதிகளில் நிலக்கடலை விதைப்புக்கு இந்த ஈரபத சீதோஷ்ண நிலை உகந்ததாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

### கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு: பாஜக வலியுறுத்தல்

கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்று பாஜக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநில வணிகர் அணி முன்னாள் செயலர் எஸ்.பி. ராஜேந்திரன் ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டி:

திருவாரூர் மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி ஏராளமான பசு மாடுகள், கன்றுகள், காளைகள், ஆடுகள் இறந்துள்ளன. எனினும், கால்நடைகள் உயிரிழப்பால் ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, கருணையுள்ளத்துடன் கால்நடைகளை இழந்து தவிக்கும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

மேலும், குடும்ப அட்டைகளில் பெயர், சேர்த்தல், நீக்கல் பணிகள் திருவாரூர் மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வருகிறது. இது குறித்த விவரங்கள் தொடர்பாக வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு செல்பவர்களிடம் குடும்ப அட்டைகளை பெற்றுக் கொண்டால் அதற்கான ரசீது வழங்க வேண்டும்.

பேரூராட்சி, கிராம பஞ்சாயத்து பகுதிகளில் தரம் வாய்ந்த சிமெண்ட் சாலைகளை அமைக்க மாவட்ட நிர்வாகம்  முன்வர வேண்டும் என்றார்.

## திருச்செந்தூர் பகுதிகளில் பலத்த மழை

திருச்செந்தூர் பகுதியில் சனிக்கிழமை இரவு இடியுடன் பலத்த மழை பெய்தது.

திருச்செந்தூர் பகுதியில் சனிக்கிழமை இரவு 8 மணிக்கு தொடங்கிய மழை, தொடர்ந்து பல மணி நேரம் நீடித்தது. இதனால் திருக்கோவில் வளாகம், சன்னிதித் தெரு, சபாபதிபுரம் தெரு, ரதவீதிகள், தினசரி சந்தை, பகத்சிங் பேருந்து நிலையம், காமராஜர் சாலை, ராஜ்கண்ணாநகர் உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் தேங்கியது. ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி திருச்செந்தூரில் 113 மி.மீ. மழையும், குலசேகரன்பட்டினத்தில் 76 மி.மீ. மழையும், காயல்பட்டினத்தில் 96.3 மி.மீ. மழையும் பதிவாகி உள்ளது.திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தினசரி நூலகம், சிவன்கோவில் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் குளம்போல் தேங்கியது.

ஆறுமுகனேரி:மழை காரணமாகஆறுமுகனேரி பகுதியிலுள்ள உப்பளங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. ஆறுமுகனேரி அருகிலுள்ள நல்லூர் கீழக்குளம் பகுதிகளில் இப்போது விவசாயிகள் விவசாயப் பணிகளை தொடங்கி உள்ளனர். குறைந்த நபர்களே பயிர் செய்ய முன்வந்த நிலையில், இம்மழை மேலும் பல விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கான நம்பிக்கையை

ஏற்படுத்தி உள்ளது.

## விவசாயிகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்

கர்நாடகத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா உறுதியளித்தார்.

இதுகுறித்து பெங்களூரு கிருஷ்ணா அரசு இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

பெல்காம், மைசூரில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளது வேதனை அளிக்கிறது. மாநிலத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளின் கோரிக்கைகளை பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க மாநில அரசு தயாராக உள்ளது. விவசாயிகளின் நலன் எப்போதும் காக்கப்படும். தற்கொலை செய்து கொள்வதால், எந்த பிரச்னைக்கும் தீர்வு கிடைக்காது. விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்க அரசு நேர்மையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அமைச்சர்கள் சாமனூர் சிவசங்கரப்பா, சதீஷ் ஜார்கிஹோளி உள்பட மாநிலத்தின் சர்க்கரை ஆலைகளின் உரிமையாளர்கள், கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை வைத்துள்ள பணத்தை உடனடியாக அளிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு உடனடியாக பணம் வழங்காத சர்க்கரை ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வேளாண் விளை பொருள் ஆணையம் அமைப்பது குறித்த விவகாரம் அமைச்சரவை துணைக் குழு முன் உள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணையம் அமைக்கப்படும்.

சட்டப்பேரவை கூட்டத்தில் பொதுமக்களின் பிரச்னைகள் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும். மாறாக, தனிப்பட்ட காரணங்களுக்காக தர்னா செய்வதும், மற்றவர்களை விமர்சிப்பதற்கும் உறுப்பினர்கள் நேரம் ஒதுக்கக் கூடாது.

முன்னாள் முதல்வர் எடியூரப்பா நடத்தி வரும் தர்னா குறித்து கவலைப்படவில்லை. அரசியல் காரணங்களுக்காக அவர் நடத்தும் தர்னாவுக்கு, அரசியல் ரீதியாக அரசு பதிலளித்துள்ளது. ஆனால், சட்டப்பேரவையை அமைதியாக நடத்த வழி வகுக்க வேண்டும்.

கரும்பு விவசாயிகள் பிரச்னை குறித்து சட்டப்பேரவையில் விவாதம் நடத்த மஜத கோரியுள்ளது. அரசின் நோக்கமும் அதுதான். பிரச்னையை விவாதித்து தீர்வு காண்போம். சட்டப்பேரவைக் கூட்டத்தை நடத்த மஜத ஆதரவு அளித்துள்ளது என்றார் அவர்.

## கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு

வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியுள்ளதால், கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலின் தென் கிழக்குப் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை நிலைகொண்டுள்ளது. இது அடுத்த 48 மணி நேரத்திற்கு நீடிக்கும் என்பதால், கர்நாடகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் தென் கர்நாடகத்தின் உள் பகுதியில் இடியுடன் கூடிய மிதமானது முதல் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும், கடலோர கர்நாடகம், வட கர்நாடகத்தின் உள் பகுதியின் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் கடலுக்குள் மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்தில் வடக்கில் இருந்து பலத்த காற்று வீசும் என்றும், பெங்களூருவை பொருத்தவரை அடுத்த 24 மணி நேரத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒரு சில இடங்களில் மட்டும் இடியுடன் கூடிய மழை பெய்யவும் வாய்ப்புள்ளது.

கர்நாடகத்தின் தட்பவெப்ப நிலையில் சில மாற்றங்கள் உருவாகியுள்ளன.

குறைந்தபட்ச தட்பவெப்பம் சரிந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, மாநிலத்தில் குறைந்தபட்சமாக சாமராஜ் நகரில் 15.7 டிகிரி செல்சியஸ் தட்பவெப்பம் பதிவானது.

பெங்களூருவின் தட்பவெப்பம் 19 டிகிரி செல்சியாக உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வேளாண் விளை பொருள் ஆணையம் விரைவில் அமைக்கப்படும்

கர்நாடகத்தில் வேளாண் விளை பொருள் ஆணையம் விரைவில் அமைக்கப்படும் என்று, அந்த மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகெப்டா தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூருவில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

வேளாண் விளை பொருள் ஆணையம் விரைவில் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம், விவசாயிகளின் விளை பொருளுக்கு உரிய விலை கிடைக்கும்.

சந்தையில் விற்கப்படும் விலைக்கே விவசாயிகளிடமிருந்து விளை பொருள்கள் கொள்முதல் செய்யப்படும். கர்நாடகத்தில் ஆள்கள் பற்றாக்குறையால் காபி விளைச்சல் குறைந்துள்ளது. காபி உற்பத்தி தொழிலில் இளைஞர்கள் ஈடுபட வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களை கையாண்டு வேளாண் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் அவர்.

## கோமாரி பாதிப்பு: இழப்பீடு வழங்க காங்கிரஸ் கோரிக்கை

கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

காங்கிரஸ் கட்சி மாவட்ட செயற்குழு கூட்டம், மாவட்டத் தலைவர்ஏ.நெடுஞ்செழியன் தலைமையில் கடலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் பி.ஆர்.எஸ். வெங்கடேசன், தொழிலதிபர் ஐ.மணிரத்தினம், நகரத் தலைவர் ரகுபதி, வழக்குரைஞர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விக்கிரவாண்டி-சேத்தியாத்தோப்பு தேசிய நெடுஞ்சாலையை விரைவாக சீரமைக்க வேண்டும். சென்னையில் உள்ள சிவாஜி கணேசன் சிலையை அகற்றக் கூடாது. கடலூர் மாவட்டத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்தவும், கால்நடைகள் இறந்ததற்கு இழப்பீடு வழங்கவும் அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

பெண்ணை, கெடிலம், வெள்ளாறுகளில் தடுப்பணைகளைக் கட்டி மழைக் காலத்தில் கடலில் வீணாகக் கலக்கும் தண்ணீரை சேமிக்க வேண்டும். மத்திய அரசு வழங்கியுள்ள சிறப்பு நிதி ஒதுக்கீட்டை, தானே புயலில் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை:விவசாயிகள் மகிழ்ச்சி

கடலூர் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை விட்டுவிட்டு மழை பெய்தது. கடலூர் நகரில் மாலையிலும் மழை பெய்தது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): அண்ணாமலை நகர் 20.20, பண்ருட்டி 15, சிதம்பரம் 12.60, வேப்பூர் 12, காட்டுமன்னார்கோவில் 10, பரங்கிப்பேட்டை 9.11, சேத்தியாத்தோப்பு 8.80, லால்பேட்டை 8, காட்டுமயிலூர் 7, கடலூர் 6.40, ஸ்ரீமுஷ்ணம் 5.

5 முதல் 10 நாள்கள் இடைவெளியில் கடந்த ஒரு மாதமாக மழை பெய்து வருவதால் சம்பா நெல் பயிர், நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுபோல் தொடர்ந்து மழை பெய்தால் ஏரிகளிலும் நீர்மட்டம் உயரும், நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்து விவசாயத்துக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.12.2013**

## கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

அரூர்: கோமாரி நோயை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதுடன், கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்கவும், விவசாயிகள், மாவட்ட நிர்வாகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வறட்சி மிகுந்த தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகளும், விவசாய கூலி தொழிலாளர்களும் தங்களது வாழ்வாதாரத்திற்கு மாடு வளர்ப்பின் மூலம் வரும் பால் கறவையை நம்பியே உள்ளனர்.

கடந்த, இரண்டு மாதங்களாக தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் உள்ளிட்ட பகுதிகளில் கோமாரி நோய் தாக்கி ஏராளமான மாடுகள் உயிரிழந்துள்ளதுடன், ஆயிரக்கணக்கான மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும் கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு உரிய இழப்பீடும், கோமாரி நோய் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளுக்கு உரிய சிகிச்சை மற்றும் முன் னெச்சரிக்கை நடவடிக்கையில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கோமாரி நோய் தாக்குதல் குறித்து கால்நடை மருத்துவர் ஒருவர் கூறுகையில் காற்றின் மூலம் வேகமாக பரவும் நோய் என்பதால், ஒரு மாட்டிற்கு கோமாரி நோய் வந்துவிட்டால் அப்பகுதியில் உள்ள எல்லா மாடுகளுக்கும் எளிதில் பரவும். கால்நடை துறை சார்பில் எல்லா மாடுகளுக்கும் எளிதில் நோய் பரவும். கால்நடை துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் போது சிலர் தடுப்பூசி போட்டால் மாட்டின் பால் கறவை குறையும், மாடு மெலிந்து விடும் என்ற எண்ணத்தில் தங்கள் மாடுகளுக்குதடுப்பூசி வழங்குவதை தவிர்க்கின்றனர்.

ஆண்டிற்கு இரண்டு முறை தடுப்பூசி போட்டால் மட்டுமே கோமாரி நோய் தாக்குதல்களிலிருந்து மாடுகளை பாதுகாக்க முடியும். ஒரு கால்நடை மருத்துவருக்கு, ஐந்து பஞ்சாயத்துகள் வீதம் அரசு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதாவது, ஒரு கால்நடை மருத்துவர், 12 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும். இதுதவிர அரசின் திட்டங்களான தீவன வளர்ப்பு, விலையில்லா ஆடு, மாடுகள் கண்காணித்தல், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கால்நடை மருந்தகங்களுக்கு வரும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பது, சிறப்பு கால்நடை முகாம் உள்ளிட்ட பணிகளை செய்வதால் அதிக பணிச்சுமை ஏற்படுகிறது.

ஒரு யூனியனுக்கு, ஆறு முதல், எட்டு கால்நடை மருத்துவர்களே உள்ளனர். எனவே அரசு கூடுதலாக கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்து, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியை வழங்கினால், அவற்றை பாதுகாக்க முடியும். மேலும் ஆண்டு தோறும் ஜூன், ஜூலை மாதங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.45 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 1,300 மூட்டை மஞ்சள், 45 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, 250 விவசாயிகள், தங்கள் விளைவித்த, 1,300 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 5,800, அதிகபட்சம், 7,585 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,400, அதிகபட்சம், 5,985 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 8,800,

அதிகபட்சம், 10 ஆயிரத்து, 700 ரூபாய்க்கும் விற்பனையானது.

ஏலத்தில், 1,300 மூட்டை மஞ்சள், 45 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரத்தை காட்டிலும், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 615 ரூபாய், பனங்காலி மஞ்சள், 440 ரூபாய் விலை குறைந்தும், உருண்டை மஞ்சள், 185 ரூபாய் விலை உயர்ந்தது.

## கர்நாடக மாநில பெரிய வெங்காயம் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு

சேலம்: கர்நாடகா மாநிலத்தில் இருந்து, பெரிய வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்து வருகிறது.

மஹாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் விளையும் பெரிய வெங்காயம், சேலம் லீபஜார் வர்த்தக மார்க்கெட்டுக்கு தினமும் வரத்தாகிறது. சேலம் நகரில் இருந்து, பல்வேறு இடங்களுக்கு லாரி, வேன் மூலம் வெங்காயம் அனுப்பப்படுகிறது.

கடந்த, ஒரு மாதமாக, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம் இரண்டுமே விலை உச்சத்தில் இருந்தது.

வட மாநிலங்களில் பெய்த தொடர் மழையால், வெங்காய வரத்து அடியோடு குறைந்தது. வெங்காயத்தை பத்திரப்படுத்தி, நல்ல விலைக்கு விற்கலாம் என்று சில வியாபாரிகள் எடுத்த முயற்சியாலும், வெங்காயம் விலை உயர்ந்து கொண்டே சென்றது. வெங்காய விலை, 100 ரூபாயை தொட்டதும், பல்வேறு அரசியல் கட்சியினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். விலையை கட்டுப்படுத்தக்கோரி, ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக, வெங்காய விலையில் சரிவு ஏற்பட்டு வருகிறது.

சேலம், லீபஜார் வர்த்தக மார்க்கெட்டில், 20க்கும் மேற்பட்ட மண்டிகளில் மொத்த விற்பனையில் வெங்காய வியாபாரம் நடக்கிறது. ஒரு வாரமாக, பெரிய வெங்காய வரத்து அதிகமாகவும், சின்ன வெங்காய வரத்து குறைவாகவும் உள்ளது. இது குறித்து வெங்காய வியாபாரிகள் கூறியதாவது:

கடந்த, 15 நாட்களுக்கு முன் பெரிய வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைத்தது.

இதனால், சில வியாபாரிகள் வெங்காயத்தை பதுக்கி, அதிக விலை கிடைக்கும் போது விற்கலாம் என்றிருந்தனர். இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக, கர்நாடக மாநிலம், கொள்ளேகாலில் இருந்து பெரிய வெங்காயம் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. மேலும், மஹாராஷ்டிரா மாநிலத்தில் சீஸன் துவங்கி விட்டதால், அங்கிருந்தும் பெரிய வெங்காய வரத்து காணப்படுகிறது. இதனால், பெரிய வெங்காயம் ஒரு கிலோ, 20 முதல், 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

ராசிபுரம், நாமக்கல் மற்றும் ஓமலூர், அரூர், தருமபுரி ஆகிய பகுதிகளில் இருந்து, சின்ன வெங்காயம் வரத்தாகிறது. சின்ன வெங்காயத்துக்கு ஓரளவு நல்ல விலை கிடைத்து வருகிறது. மொத்த மார்க்கெட்டில் ஒரு கிலோ, 50 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வைகாசி, ஆனி மாதத்தில் மட்டுமே சின்ன வெங்காயம் விலை குறைய வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### விதைப் பயிர்கள் வளர்க்க கரும்பு சாகுபடி

விழுப்புரம் : விதைக் கரும்பு நாற்றுகள் தயார் செய்ய, தோட்டங்களிலிருந்து கரும்புகளை வெட்டி எடுத்து செல்லும் பணியில் ஆலை நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

புதிதாக கரும்பு நடவு செய்ய, ஏற்கனவே உள்ள வயல்களிலிருந்து, 6 மாதங்களான கரும்புகளை விதைக் கருணைகளாக நறுக்கி, அவற்றை பார்களில் நடவு செய்வது வழக்கம்.

தற்போது கரும்பு விதைகளை நடவு செய்யாமல், புதிய தொழில் நுட்பத்தின் படி, விதைக்காக தேர்வு செய்யப்படும் கரும்பின் கணுக்களை மட்டும், சிறிய துண்டாக வெட்டி எடுத்து, அவற்றை சிறிய பிளாஸ்டிக் குழித் தட்டுகளில் வைத்து பராமரிப்பு செய்கின்றனர்.

இவ்வாறு பராமரிப்பு செய்யப்படும் போது கரும்பு பயிர்களுக்கு தேவையான நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகள், ஊட்டசத்து உரங்கள் அளிக்கப்படுகின்றன.

இவ்வாறு பராமரிக்கப்படும் கரும்பு நாற்றுகள் வளர்ந்தவுடன், அவற்றை நெல்

நாற்று நடவு செய்வது போல், உரிய இடைவெளி விட்டு நடவு செய்கின்றனர்.

இவ்வாறு நடவு செய்யப்படும் கரும்பு பயிர்கள் விரைவாக வளர்ச்சி அடைகின்றன. இதில் பூச்சி தாக்குதல் மிகவும் குறைவாக உள்ளது. கரும்பு நாற்றுகளாக நடவு செய்யப்படும் வயல்களில், சொட்டு நீர் பாசனம் அமைப்பதும் எளிதா கிறது.

இதற்காக தற்போது கரும்பு நடவு செய்துள்ள

## மழையில் நனைந்து வீணாகும் பஞ்சு கூலியாட்கள் கிடைக்காமல் தவிப்பு

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் மானாவாரி பருத்தி செடிகளில் பஞ்சு வெளிப்பட்டுள்ள நிலையில் மழையில் வீணாகாமல் பாதுகாப்பாக சேகரிக்க போதிய கூலியாட்கள் கிடைக்காமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

தியாகதுருகம் பகுதியில் 7 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் பருத்தி சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. போதிய மழை இல்லாத நிலையிலும் கிடைத்த ஈரத்தை பயன்படுத்தி விதைப்பு பணிகளை முடித்தனர்.

தொடர்ந்து எதிர்பார்த்த மழை பெய்யாததால், செடிகள் வளர்ச்சியடையாமல்

குறைந்த எண்ணிக்கையில் காய்த்தன.

இதனால் பருத்தி காய்கள் முன்னதாகவே வெடித்து பஞ்சு வெளிப்பட்டுள்ளது. சரியான தருணத்தில் முற்றி பஞ்சு வெளிவந்தால் மட்டுமே தரமானதாக இருக்கும். இதற்கு நல்ல விலையும் கிடைக்கும். இந்நிலையில் காய்கள் முற்றும் முன்னரே மழை காரணமாக செடியில் இருந்து பஞ்சு வெளிப்பட்டதால் பஞ்சு தரமின்றி உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களாக அவ்வப்போது பெய்து வரும் மழைநீரில் பஞ்சு நனைந்து வீணாகிறது. இதனை சேகரிக்க போதிய கூலியாட்கள் கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடிவருகின்றனர்.

காலை 8 மணியில் இருந்து

2 மணிவரை பஞ்சு சேகரிக்க 100 ரூபாய் கூலியாக கொடுக்கப்

பட்ட நிலையில், ஆட்கள் பற்றாக்குறை காரணமாக கூடுதலாக 30 ரூபாய் வரை

கொடுக்க வேண்டியுள்ளது.

அதேபோல் கிடைத்த ஆட்

களை மாலை 6 மணிவரை வேலை செய்யவைத்து இரட்டிப்பு கூலியும் சில

இடங்களில் கொடுக்கின்றனர். காய்கள் குறைந்து மகசூல் பாதிக்கப்பட்டுள்ள

நிலையில், கிடைத்த பஞ்சை பாதுகாப்பாக சேகரிக்க முடியாமல் விவசாயிகள் பல பிரச்னைகளை சந்திக்க வேண்டியுள்ளது.

மழை பெய்யாததால் மகசூல் குறைந்து ஏமாற்றமடைந்த விவசாயிகள், கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் பஞ்சு கொள்முதல் விலை அதிகமாக கிடைக்குமா என்று ஏக்கத்துடன் எதிர்பார்க்கின்றனர்.

## எண்ணெய் பனையில் ஊடுபயிராக உளுந்து

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி செய்துள்ள எண்ணெய் பனையில் ஊடுபயிராக உளுந்து பயிரிடப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம் பகுதியில் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் மற்றும் அதிக லாபம் தருவதால் எண்ணெய் பனை சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயிகளை ஊக்குவிக்க வேளாண்மை துறையின் மூலம் மானியமும் வழங்கப்படுகிறது.கள்ளக்குறிச்சி அடுத்த நீலமங்கலம் பகுதியில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.92 ஆயிரம் மானியத்தில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நீண்ட இடைவெளி விட்டு அமைந்துள்ள எண்ணெய் பனை சாகுபடியில் தண்ணீரை சேமிக்க சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் எண்ணெய் பனையில் குறுகிய கால அறுவடை பயிர்களாக உளுந்து, மணிலா போன்ற பயிர்கள் ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளனர்.

சில நாட்களாக பெய்த மழையில் உளுந்து பயிர் செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## விழுப்புரத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரிக்கை

மயிலம் : விழுப்புரத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்ட கிராம மக்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பி யுள்ளனர். பருவமழை சரியாக பெய்யதால் நதிகள் தண்ணீர் இல்லாமல் வறண்டுள்ளது. இதனால் கோமுகி, வீடுர் அணைகளில் நீர் இல்லாமல் ஆடு, மாடுகள் மேய்ச் சல் நிலமாக மாறியுள்ளது.

மாவட்ட நிலம் நெல், கம்பு, கருணை,வெங்காயம், கரும்பு,கீரை வகைள், சவுக்கு, சோளம் போன்றவை நன்றாக செழித்து வளரும் தன்மை கொண்ட நிலப்பகுதியாகும்.

பருவ மழை உரிய காலத்தில் பெய்யாமல் இருப்பத ால் உழவர்கள் பட்டம் தவறி விவசாயம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு உரிய பலன் கிடைக்காமல் அவதியடைந்துள்ளனர். மழை சரியாக இல்லாதால் பெரும் பாலன விவசாயிகள் கூலி வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. கிராம மக்கள் ஊரக வேலை உறுதியளிப்பு திட்ட பணிகளுக்கு செல்லுவதால் விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைக்காமல் அவதியடைகின்றனர்.

அரசாங்கத்தை எதிர் பார்க்காமல் ஏரி குளத்திற்கு தண்ணீர் செல்லும் கால்வாய்களை உழவர்கள் சீர் செய்ய வேண்டும்.அப்போது தான் சிறிது மழை பெய்தாலும் நீர் நிலைகளுக்கு தண்ணீர் செல்லும்.

மாவட்டத்திலுள்ள கிராமங்களில் மின் மோட்டார் வசதி பெற்ற ஒரு சில விவசாயிகள் நெல் நடவு பணிகளை துவக்கியுள்ளனர்.

ஏரி, ஆற்றுப் பாசன விவசாயிகள் மிகுந்த வேதனையுடன் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தை அரசு வறட்சி பகுதியாக அறிவித்து, பாதிப் புக்குள்ளான பயிர்களுக்கு வறட்சி நிவாரண உதவிகளை வழங்கவேண்டுமென விவசா யிகள் தரப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொரட்டுக்குப்பத்தில் காற்றால் நெற்பயிர்கள் சேதம்

அவலூர்பேட்டை : அவலூர்பேட்டை அருகே காற்று வீசியதால் நெற்பயிர்கள் நிலத்தில் சாய்ந்து சேதமடைந்தது. அவலூர்பேட்டை அடுத்த கோவில் புரையூர் ஊராட்சிக்குட்பட்ட கொரட்டு குப்பம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு லேசான மழையுடன் காற்று வீசியது.

அப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த நெல் பயிர்கள் நிலத்தில் சாய்ந்தன. ஜீரோ 15 நெல்லை பயிரிட்ட விவசாயி ஒருவர் கூறுகையில் , 90 நாள் முடிந்ததும் நெல் அறுவடை துவங்கும்.

தற்போது 70 நாள் ஆகிறது. அதற்குள் காற்று வீசியதால் கதிர்கள் சாய்ந்து சேதமடைந்துள் ளது. இவ்வாறு விவசாயி கூறினார்.இது போல் பல இடங்களிலும் நெற்பயிர்கள் சாய்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கரும்பு பூக்கள் வைத்துள்ளால் விவசாயிகள் கலக்கம் :பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படும் அபாயம்

விழுப்புரம் : விழுப்புரம் சுற்று வட்டாரப் பகுதிகளில், விவசாயிகள் நடவு செய்துள்ள கரும்பில், பருவ நிலை மாற்றம் காரணமாக பூக்கள் வைத்துள்ளதால், விளைச்சல் குறைந்து, விவசாயிகளுக்கு பல ஆயிரம் ரூபாய், நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளது.

தமிழகத்தின் பிரதான பணப் பயிராக கரும்பு சாகுபடி உள்ளது. கூடுதல் பரப்பளவுள்ள, பெரிய மாவட்டமான விழுப்புரத்தில், நூற்றுக் கணக்கான விவசாயிகள் கரும்பு பயிர் செய்கின்றனர். இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் ஒன்பது கரும்பு சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

ஒரு முறை நடவு செய்யும் கரும்பு, 12 மாதத்திற்கு பின் அறுவடை செய்யப்படுகிறது. இவ்வாறு மூன்று முறை கரும்பு தொடர் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. நடவு செய்யும் முதல் ஆண்டில், கூடுதல் செலவு ஏற்பட்டாலும், அடுத்த இரண்டு ஆண்டுகள் உழவு மற்றும் நடவு செலவுகள் இல்லாததால், விவசாயிகளுக்கு ஓரளவிற்கு லாபம் கிடைக்கிறது. ஆண்டிற்கு ஒரு முறை அறுவடை பணி என்பதால், ஆட்கள் தேவையும் குறைவாக உள்ளது.

எளிய முறை தற்போது கரும்பு பயிரில், களை நீக்குதல், அறுவடை செய்தல் மற்றும் சொட்டு நீர் பாசனம் போன்ற தொழில் நுட்பங்கள் மூலம் உரங்கள் செலுத்துதல் போன்றவற்றால், விவசாயிகள் எளிமையான முறையில் கரும்பு சாகுபடியில் ஈடுபடுகின்றனர்.

கரும்பு நடவு செய்ய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்திய அரசு வங்கிகள் பயிர் கடன்கள் எளிதாக வழங்குகின்றன. அறுவடை செய்யும் கரும்பை ஆலைக்கு அனுப்பியதும், அதிலிருந்து கடன் தொகையை, வங்கிகள் பிடித்தம் செய்கின்றன. இதனால் கரும்பு சாகுபடிக்கு கடன் வாங்குவதும், திருப்பிச் செலுத்துவதிலும் விவசாயிகளுக்கு சிக்கல் இல்லை.

ஒரு ஏக்கருக்கு 40 முதல் 70 டன்கள் வரை கரும்பு அறுவடை செய்யப்படுகின்றன. கடந்தாண்டு வரை டன் ஒன்றிற்கு ஆதார விலையாக 2,250 ரூபாய் அரசு வழங்கி வருகிறது. கரும்பு தக்கை விழுப்புரம் அடுத்த வாணியம்பாளையம், ப.வில்லியனூர்,

அகரம் உள்ளிட்ட பல கிராமங்களில் பயிர் செய்துள்ள கரும்பு தற்போது பூ விட்டுள்ளது. இவ்வாறு பூத்துள்ள கரும்புகள் தக்கை பாய்ந்து, எடை குறைவு ஏற்படுவதால், விவசாயிகளுக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படும் அபாய நிலை உள்ளது.

கரும்பு அலுவலர் ஒருவர் கூறியதாவது:

கடந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டத்தில் போதிய மழை இல்லை. இந்தாண்டும் வட கிழக்கு பருவ மழை சரியாக பெய்யவில்லை. மழைக்காலமான தற்போது, பகலில் கூடுதல் அளவு வெயிலும், இரவில் அதிக பனி பொழிகிறது. இந்த சூழல் கரும்பின் இனவிருத்திக்கு ஏற்றதாக உள்ளது. இதனால் கரும்பில் பூக்கள் பூத்து குலுங்குகின்றன. மேலும் பரிந்துரை செய்யப்படாத சில ரகங்களை விவசாயிகள், தங்கள் விருப்பம் போல் நடவு செய்வதாலும், கரும்பு பூக்கள் வைக்கின்றன.

ஒரு ஏக்கரில் 40 ஆயிரம் கரும்பு பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. இருப்பினும் தாய் கரும்புகளில் 2 ஆயிரம் வரை மட்டுமே, பூக்கும் தன்மை பெறுகின்றன. மற்ற கரும்புகள் பூப்பதில்லை. இன்னும் சில நாட்களில் ஆலைகளில் அறவை துவக்கியவுடன், இந்த கரும்புகள் அறுவடை செய்யப்படும்.

இதனால் விவசாயிகளுக்கு அதிகளவு நஷ்டம் ஏற்பட வாய்ப்பு இல்லை. கடந்த ஆண்டுகளை விட இந்தாண்டு கரும்பு சாகுபடி பரப்பு குறைந்துள்ளதால், விரைவாக அனைத்து கரும்புகளும் அறுவடை செய்யப்படும் என தெரிவித்தார்.

கலக்கம் இருப்பினும் பூ வைத்துள்ள கரும்புகள், எடை குறைந்து, விரைவாக காய்ந்து விடும் என்பதால், அறுவடை செய்யும் போது, எடை இழப்பு ஏற்பட்டு, பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

## தென்னை விவசாயிகளுக்கு சலுகைகள் மத்திய இணை அமைச்சர் உறுதி

புதுக்கோட்டை: ""புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த தென்னை விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகளின் சலுகைகள் மற்றும் நிதி உதவிகள் பெற்றுத்தரப்படும்," என, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் சுதர்ஸன நாச்சியப்பன் உறுதியளித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தென்னை விவசாயிகள் நல சங்கம், இந்திய தென்னை வளர்ச்சி வாரியம், புதுக்கோட்டை தென்னை விவசாயிகள் சங்க கூட்டமைப்பு சார்பில் கருத்தரங்கு மற்றும் காண்காட்சி நடந்தது.
இந்திய தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் ஹேமச்சந்திரன் தலைமை வகித்தார். செயற்பொறியாளர் குமார் பொதுவாள் முன்னிலை வகித்தார்.
தென்னை விவசாயிகள் சங்கத் தலைவர் செல்லத்துரை வரவேற்றார்.
கண்காட்சியை துவக்கிவைத்து மத்திய இணை அமைச்சர் சுதர்ஸன நாச்சியப்பன் பேசியதாவது:
புதுக்கோட்டை மாவட்டத்தில் குறிப்பாக அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் உள்ளிட்ட கடலோரக் கிராமங்களில் தென்னை அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இருந்தும் தென்னை விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகளின் சலுகைகள், நிதி உதவிகள் கிடைப்பதில்லை.
விவசாய பயிர்கள் பட்டியலில் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளது. தென்னை இடம்பெறவில்லை. இதன்காரணமாகத்தான் தென்னை விவசாயிகளுக்கு சலுகைகள் பெற முடியாத நிலை உள்ளது.
இந்த நிலை மாறி இதர விவசாயிகளைப் போன்று தென்னை விவசாயிகளுக்கும் மத்திய, மாநில அரசுகளின் சலுகைகள், நிதி உதவிகள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேரள மாநிலம் கொச்சியில் உள்ள இந்திய தென்னை வளர்ச்சிக் கழக அதிகாரிகளை தொடர்புகொண்டு வலியுறுத்தினேன்.
இதை ஏற்று கொச்சி தென்னை வளர்ச்சிக்கழக அதிகாரிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் தென்னை சாகுபடி குறித்து ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.
இதைத்தொடர்ந்து விவசாய பயிர்கள் பட்டியலில் தென்னையும் இடம்பெற்றுள்ளது.
இதன் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்ட தென்னை விவசாயிகளுக்கு இனிமேல் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து வறட்சி நிவாரண சலுகைகள் மற்றும் நிதி உதவிகள் கிடைக்கும். பனை பொருட்களைப் போன்று தென்னை பொருட்களுக்கும் நல்ல விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
விவசாயிகளுக்கும் சரி, ஏழை எளியவர்களுக்கும் சரி உதவிகள் செய்யும் ஒரே கட்சி

காங்கிரஸ் தான்.

ஏழை, எளியவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும் என்பதற்காகத் தான் மத்திய அரசு உணவு பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இதை அமல்படுத்துவதற்காக ஒரு லட்சத்து, 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை, எளிய மக்களுக்கு ரேஷன் கடைகள் மூலம் வினியோகம் செய்வதற்காக மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டுக்கு, 63 லட்சம் மெட்ரிக் டன் அரிசி கிடைக்க உள்ளது. இச்சட்டத்தின் உண்மை நிலையை புரிந்துகொள்ளாமல் சிலர் விமர்சனம் செய்கின்றனர்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

## முக்கால் அடி வாழையில் குலைத்தள்ளிய அதிசயம்

பெரம்பலூர்: பெரம்பலூர் அருகே வெட்டிய வாழை மரத்திலிருந்து முக்கால் அடி உயரத்தில் குலைத்தள்ளிய சம்பவம் மக்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது.

பெரம்பலூர் அருகே செஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்தவர் முருகேசன். இவர் வீட்டின் காம்பவுண்டு சுவர் அருகில் வாழை மரங்களை வளர்த்து வருகிறார். இந்த வாழை மரங்களில் அருகருகே இரண்டு வாழை மரம் இருந்துள்ளது. இதில், ஒன்றை கடந்த ஒரு மாதத்திற்கு முன் வெட்டியுள்ளார். வெட்டிய மரம் தற்போது சுமார் முக்கால் அடி தான் உள்ளது.

அந்த அடிக்கட்டை மரத்திலிருந்து வெளிவந்துள்ள தண்டிலிருந்து வாழை தார் ஒன்று பூத்து காய் காய்த்துள்ளது. அந்த காய், 6 சீப்புகளை கொண்ட, 100 காய்களாக உள்ளது. வெட்டிய மரத்திலிருந்து வாழைத்தார் காய்த்துள்ளதை அதை வளர்த்த முருகேசனும், அப்பகுதியைச் சேர்ந்த மக்களும் பார்த்து ஆச்சர்யம் அடைந்து வருகின்றனர்.

## கோமாரி நோய் சிறப்பு முகாம்

ஊட்டி : ஊட்டி அருகே, கோமாரி நோய் கண்டறிதல் தொடர்பான சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

ஊட்டி அருகேயுள்ள எல்லநள்ளி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர், ""தங்கள் மாடுகளின் காலில் புண் ஏற்பட்டுள்ளது; வாயில் ஜொல், நுரை ஊற்றுகிறது; மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கி இருக்கலாம்,'

எனக் கூறினர்.

இதனைத்தொடர்ந்து, நீலகிரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் லட்சுமணன் தலைமையில், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் டாக்டர் முல்லைச் செல்வன், கேத்தி கால்நடை உதவி மருத்துவர் பார்த்தசாரதி ஆகியோர் அடங்கிய குழு, எல்லநள்ளி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மாடுகளை பரிசோதித்தனர்.

பின், மாடுகளுக்கு தடுப்பூசி, மருந்து செலுத்தினர். கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் லட்சுமணன் கூறுகையில், ""எல்லநள்ளி பகுதியில், அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இப்பகுதியில், நோய் தாக்குதல் இல்லை.

கால்நடைகளுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டால், அருகேயுள்ள கால்நடை மருத்துவரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டுள்ளது," என்றார்.

## தேங்காய் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்வு பொதுமக்கள், பக்தர்கள் கடும் அதிர்ச்சி

ஆறுமுகநேரி:தினசரி சமையல் மற்றும் பூஜை பயன்பாட்டுக்கு தேவைப்படும் தேங்காய் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது பொதுமக்கள்மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தினசரி வீடுகளில் சமையல் செய்ய பயன்படும் பொருட்களில் மிகவும் முக்கியமானது தேங்காய். காலை சட்டினி அரைப்பதற்கு தேங்காய் இல்லை என்றால் அன்றைய சமையல் பணி முழுவதும் அப்படியே நின்று விட்டது போன்ற நிலை ஏற்பட்டுவிடும். தேங்காய் இல்லாமல் சட்டினி எப்படி அரைப்பது என்ற வசனம் கேட்காத வீடே இருக்காது. அதே போன்று கோயிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்ய நினைக்கும் பக்தர்கள் அர்ச்சனை செய்து வழிபடுவதையே பெரும்பாலும் விரும்புவார்கள். அதற்கு தேவைப்படுவது தேங்காய், பழம் வெற்றிலைபாக்கு முக்கியமானதாகும். அதிலும் தேங்காய் உடைத்து சுவாமி தரிசனம் செய்தால் தான் தரிசனம் செய்ய திருப்தியே மக்களுக்கு உண்டாகும். அந்த அளவிற்கு பொதுமக்களின் அன்றாட தேவையில் மிகவும் முக்கியமான ஒன்று என்றால் தேங்காய்தான்.

தமிழகத்தில் விற்பனை செய்வதற்கான தேங்காய் நாகர்கோயில், பொள்ளாச்சி மற்றும் அண்டை மாநிலமான கேரளா போன்ற இடங்களில் இருந்து அதிகமாக வருகிறது. இவ்வாறு வரும் தேங்காய் அந்தந்த இடங்களில் உள்ள சந்தைகளில் மொத்த வியாபாரமாக இருந்து வருகிறது. மொத்த வியாபாரிகளிடம் இருந்து சில்லரை வியாபாரிகள் மூடை கணக்கில் தேங்காய் வாங்கி வந்து கடைகளில் விற்பனை செய்து வருகின்றனர்

கடந்த ஒரு மாதமாக தேங்காய் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து கொண்டே இருக்கிறது. தற்போது இந்தியா முழுவதும் வெங்காயம் விலை உயர்வு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. அதே போன்று தற்போது தென்மாவட்ட பகுதியில் தேங்காய் விலை உயர்வு கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

கடந்த மாதங்களில் தனித்தனியாக கடைகளில் விற்பனை செய்து கொண்டிருந்த தேங்காய்களில் சுமாரான சைஸ் ரூ.5க்கு விற்பனை செய்யப்பட்டது தற்போது ரூ12 வரை உயர்ந்துள்ளது. ரூ.7, ரூ.10 என விற்பனை செய்யப்பட்ட தேங்காய் ரூ.15, ரூ.20 என உயர்ந்து விட்டது. ஒரு சில இடங்களில் தேங்காய் கிலோ கணக்கிலும் விற்பனை செய்து வருகின்றனர். முன்பு ஒரு கிலோ தேங்காய் ரூ.13, ரூ.15 வரை இருந்தது தற்போது ரூ.26 முதல் ரூ.30 வரை உயர்ந்து விட்டது. இந்திய அரசிலையே வெங்காயம் விலை உயர்வு அசைத்துப் பார்த்தது போன்று வரும் தேர்தலில் தேங்காயும் ஒரு கை பார்த்துவிடும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு திடீரென உயர்ந்துள்ளதற்கான காரணம் என்ன, தேங்காய் விலை உயர்வை கட்டுப்படுத்த வழி என்ன என தமிழக அரசு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## பாபநாசம் அணை நீர்மட்டம் 95.30 அடியானது

விக்கிரமசிங்கபுரம் : பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 95.30 அடியானது. நெல்லை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தபோதிலும் காரையார் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் போதுமான மழையில்லை. இதனால் பாபநாசம் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலிருந்து அணைக்கு குறைந்தளவே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 547.92 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1004.75கனஅடி நீர்

வெளியேறியது. பாபநாசம் அணைப்பகுதியில் 17 மி.மீ, கீழ் அணையில் 12 மி.மீ, சேர்வலாரில் 7 மி.மீ, மணிமுத்தாறில் 11.4 மி.மீ, அம்பையில் 6.2 மி.மீ, சேரன்மகாதேவி 5 மி.மீ அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது. நேற்று காலை சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 104.17 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.07 அடியாக இருந்தது. இந்த அணைக்கு வினாடிக்கு 80 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 35 கனஅடி நீர் வெளியேறியது.

### பாபநாசம் அணை நீர்மட்டம் 95.30 அடியானது

விக்கிரமசிங்கபுரம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 95.30 அடியானது. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 547.92 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1004.75கனஅடி நீர் வெளியேறியது. பாபநாசம் அணைப்பகுதியில் 17 மி.மீ, கீழ் அணையில் 12 மி.மீ, சேர்வலாரில் 7 மி.மீ, மணிமுத்தாறில் 11.4 மி.மீ, அம்பையில் 6.2 மி.மீ, சேரன்மகாதேவி 5 மி.மீ அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது. நேற்று காலை சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 104.17 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.07 அடியாக இருந்தது. இந்த அணைக்கு வினாடிக்கு 80 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 35 கனஅடி நீர் வெளியேறியது.

### வேளாண் அலுவலர்களுக்கான தொழில் நுட்ப பயிற்சி

விருதுநகர் : வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில், தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் கீழ் விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம்மாவட்ட, வேளாண் வணிக அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கான ஒருநாள் தொழில்நுட்ப பயிற்சி, விருதுநகரில் நடந்தது. விருதுநகர் வேளாண் இணை இயக்குனர் சுப்பையா தலைமை வகித்து, உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் திட்டங்கள் குறித்து பேசினார். வேளாண் வணிக துணை இயக்குனர் முத்துமுனியாண்டி முன்னிலை வகித்து, தேசிய உணவு

பதப்படுத்தும் இயக்கத்திட்ட வழிமுறைகள், மானிய விபரங்கள் குறித்து விளக்கினார். வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் அருண் கிரிதாரி, மாவட்டத்தில் உணவுப்பதப்படுத்தும் தொழில் வாய்ப்புகள் குறித்து பேசினார். மாவட்ட தொழில்மைய மேலாளர் சாந்தகுமார், புதிய தொழில் துவங்குவதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் குறித்து பேசினார். நபார்டு உதவி மேலாளர் சுப்பிரமணியன், வங்கியின் செயல்பாடுகள், தொழில் முனைவோருக்கான வங்கி சேவை,சேமிப்பு கிட்டங்கியின் பயன்பாடு குறித்து விளக்கினார்.

### பண்ணைக்குட்டைகளால் எவ்வித பயனுமில்லை விவசாயிகள் புலம்பல்

முதுகுளத்தூர்: மழைநீரை சேமித்து, விவசாயத்தை காக்க ஏற்படுத்தபட்ட, பண்ணைக்குட்டைகளால் பலனில்லாததால், விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.ரோட்டோரங்கள், தரிசு நிலங்களில் வீணாகும் மழைநீரை சேமித்து, விவசாயத்தை காக்கும்வகையில், கிராம பகுதிகளில், நூறு நாள் வேலைத்திட்டத்தின்கீழ், விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைக்கபட்டது. பண்ணை குட்டைகள் அமைத்ததால், கிராம மக்கள் இத்திட்டத்தின் மூலம், வருமானத்தை பெற்றனரே தவிர, பருவமழை ஏமாற்றியதால் தண்ணீரின்றி, கரிசல் நிலம்போல் விரிசலடைந்துள்ளது. சவேரியார்பட்டிணம் ஜேசு கூறுகையில், ""மழைநீரை சேமிக்க, தரிசு நிலங்களில், சிறிய பண்ணை குட்டைகள் அமைக்க முன்வந்த, அரசு நிர்வாகங்கள், பிரதான ஆறுகளிலிருந்து வரத்து கால்வாய் அமைத்தால்கூட, அழிந்துவரும் விவசாயத்தை காக்கலாம். விவசாய நிலங்கள் உழவு பணி செய்ததுடன் உள்ளதால், விவசாயிகள் கலக்கத்தில் இருக்கின்றனர்," என்றனர்.

### ராமநாதபுரத்தில் அதிகபட்ச மழை

ராமநாதபுரம்: மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக பரவலாக மழை பெய்து வருவதால், ரோட்டில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி வருகிறது.

ராமநாதபுரத்தில் பாரதி நகர், சின்னக்கடை, கொல்லம்பட்டறை தெரு, கேணிக்கரை, ஓம் சக்தி நகர், நேரு நகர், சாலைத்தெரு உள்பட 25க்கும் மேற்பட்ட தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது. இதனால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டது. நேற்று, ராமநாதபுரம்- 59.6, தங்கச்சிமடம்- 30, வாலிநோக்கம்- 25, பள்ளமோர்குளம்- 24, பாம்பன்- 21.8, ஆர்.எஸ்,மங்கலம்- 20.3, கடலாடி- 20, மண்டபம்- 19, கமுதி- 17.2, ராமேஸ்வரம்- 15.4, தீர்த்தாண்டதானம்- 12, வட்டாணம்- 12, தொண்டி- 11.5, பரமக்குடி- 11.4, முதுகுளத்தூர்- 10.6, திருவாடானை- 8.8 மி.மீட்டர் மழை பெய்தது.

## கத்தரியில் கரும்புள்ளி நோய்

தேவாரம்: தேவாரம் பகுதியில் கத்தரியை தாக்கியுள்ள, கரும்புள்ளி நோயால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.
தேவாரம், தம்மிநாயக்கன்பட்டி, டி.செல்லாயிபுரம், டி.மீனாட்சிபுரம், பொட்டிப்புரம், டி.புதுக்கோட்டை, அய்யம்பட்டி பகுதியில் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் ஒட்டு ரக கத்தரிக்காய் பயிரிடப்பட்டுள்ளது. அதிக விளைச்சல், நல்ல விலை காரணமாக இவ்வகை கத்தரி பயிரிட்டவர்களுக்கு "ஜாக்பாட்' அடித்தது.
இந்நிலையில், கடந்த வாரத்தில் பெய்த தொடர் மழை மற்றும் தற்போது நிலவும் பனிப் பொழிவால், கத்தரியில் ஓட்டை விழுகிறது. அறுவடைக்கு தயாராக உள்ள கத்தரியில் இவ்வகையான நோய் தாக்கம் 20 சதவீத அளவு உள்ளது.
விவசாயி ஜெயக்குமார் கூறுகையில்,""அறுவடைக்கு தயாராக உள்ள காயில், கரும் புள்ளி விழுந்து, ஓட்டையாகிறது. ஒரு டன் காய் பறித்தால், 200 கிலோவிற்கு மேல் வீணாகிறது. நோய் தாக்கிய செடியை சுற்றியுள்ள செடிகளும் பாதிக்கப்படுகின்றன. நோய் தாக்கிய செடிகளை அப்புறப்படுத்தி, காய்களை பறித்து வருகிறோம். விவசாயத்துறையினர் நோய் தாக்கத்தை தடுக்க உரிய வழி முறைகளை கூற வேண்டும்," என்றார்.

## மாவட்டத்தில் போலி விதை நெல் விற்பனை அதிகரிப்பு : கையொடிந்த நிலையில்விதை சான்றளிப்புத்துறை

கம்பம் : தேனி மாவட்டத்தில், போலி விதை நெல் விற்பனை துவங்கியுள்ளது. விற்பனையில் விதை சான்றளிப்புத் துறையின், சான்று தேவையில்லை என்ற அரசின் சட்டதிருத்த மசோதா, விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது.

தமிழகத்தில்,நெல் சாகுபடியில் தேனி மாவட்டம் குறிப்பிட்ட இடத்தை பிடித்துள்ளது. கூடலூரில் ஆரம்பித்து பழனிசெட்டிபட்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. எக்டருக்கு 8 டன் சாகுபடி செய்யப்படும் இங்கு, சமீப காலங்களில் வீரிய ஒட்டுரக விதை நெல் பயன்பாடு அதிகரித்துள்ளது.

முதல் போகம் மற்றும் இரண்டாம் போக சாகுபடிகளில் வீரிய ஒட்டுரக நெல் பயிரிடப்படுகிறது.விவசாயத்துறை வேறு ரகங்களை பரிந்துரை செய்தாலும், அதிக மகசூல் என்ற ஒரே குறிக்கோளில், விவசாயிகள் வீரிய ஒட்டு ரகங்களை வாங்கி பயன்படுத்துகின்றனர்.சாதாரண நெல்லை காட்டிலும் பலமடங்கு விலை அதிகம் கொடுத்து வாங்குகின்றனர்.

கூடலூரில் சாகுபடி செய்யப்பட்ட இரண்டாம் போக நாற்றாங்காலில், நெல் பயிர்கள் கருகியுள்ளது. இந்த தகவல், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது. போலி விதை நெல் விற்பனை துவங்கியிருப்பதாக விவசாயிகள் சந்தேகிக்கின்றனர். விதை நெல் விற்பனை, விவசாயத்துறையில் உள்ள விதை சான்றளிப்பு துறை அதிகாரிகள் சான்றளித்த பிறகே விற்கப்படும். அதிகாரிகள், விதைநெல் தொடர்பான அனைத்து விபரங்களையும் அலசிப்பார்த்து, அதற்கு பிறகே சான்றளிப்பார்கள். அப்படியிருக்கையில், போலி விதை நெல் எப்படி விற்பனைக்கு வருகிறது.

விவசாயத்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" போலி விதை நெல் விற்பனை அங்கொன்றும் இங்கொன்றும் இருக்கலாம். பெரும்பாலும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், சமீபத்தில் அரசு செய்த சட்டதிருத்தம் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. வீரிய ஒட்டுரகங்கள், விதை சான்றளிப்புத்துறையிடமிருந்து,

சான்று பெறத் தேவையில்லை என்று சமீபத்தில் சட்டதிருத்தம் கொண்டுவரப்பட்டுவிட்டது. எனவே, விதை நெல் விற்பனையில், விதை

சான்றளிப்பு துறையிடம் அனுமதி கேட்பதில்லை. இந்த சட்டதிருத்தம், போலி விதை நெல் விற்பனையாளர்களுக்கு பெரும் சாதகமாக மாறிவிட்டது." என்றார். வீரிய ஒட்டுரகங்களுக்கு, தமிழக விவசாயத்துறையின் விதை சான்றளிப்புத் துறையின் சான்றளிப்பு தேவையில்லை, என்ற சட்டதிருத்தத்தை உடனடியாக அரசு திரும்ப பெற வேண்டும். காரணம், போலி விதைகள் விற்பனை செய்யும் போது, சம்பந்தப்பட்டவர்கள் மீது யார் நடவடிக்கை எடுப்பது என்பது கேள்விக்குறியாகிறது.

மேலும், அதிகாரிகள் அனைவரும் நமக்கு ஏன் இந்த வம்பு என்ற கோணத்தில் நடவடிக்கை எடுப்பதில் இருந்து விலகி செல்கின்றனர். எனவே, விவசாயம் மற்றும் தோட்டக்கலை மாவட்டமான தேனியில், போலி விதை நெல் விற்பனையை தடுக்க விவசாயத்துறையினர் மற்றும் விதை சான்றளிப்புத் துறையின் கண்காணிப்பு அவசியம்.

யாருக்கு அதிகாரம்

தரக்கட்டுப்பாடு துறைக்கும் அதிகாரமில்லை, பன்னாட்டு கம்பெனிகள், தங்களின் விதை நெல்லுக்கு, தமிழக விவசாயத்துறையின், விதை சான்றளிப்புத் துறையின் சான்று தேவையில்லை என்பதால், விதை சான்றளிப்பு துறையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சரி, தரக்கட்டுப்பாடு துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முடியுமா என்றால், அவர்களும் அதிகாரமில்லை என்ற தகவல் சொல்லப்படுகிறது. உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் தரம் மட்டுமே பார்க்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதை நெல் தரம் பற்றி ஆய்வு செய்ய எங்களுக்கு அதிகாரம் இல்லை என்கின்றனர்.

## கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டதாகதவறான தகவல் தந்த கால்நடை துறையினர்

தேவதானப்பட்டி : தேனி மாவட்டம், ஜெயமங்கலத்தில் 95 சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசிபோட்டதாக, தவறான தகவல் தந்த கால்நடை துறையினர் குறித்து, வருவாய்த் துறையினர் ஆய்வில் தெரியவந்துள்ளது.தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, ஜெயமங்கலத்தில் கடந்த நவ., 5ல், இருந்து 70 க்கும் மேற்பட்டவிலையில்லா ஆடுகள், நோய் தாக்கி இறந்துள்ளன. கடந்த, நவ.,

10க்கு பிறகு நேற்று வரை, கோமாரி நோய் தாக்குதலால் 20 மாடுகள் இறந்துள்ளன.கடந்த வாரம்,கலெக்டர் பழனிசாமி, ஜெயமங்கலத்தில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, டாக்டர்கள் யாரும் வருவது இல்லை. கால்நடை வளர்ப்போர் விலாசம் முழுமையாக இல்லை, என பாதிக்கப்பட்டோர் புகார் கூறினர். ஆனால், 95 சதவீதம் மாடுகளுக்கு தடுப்பூசி போட்டாச்சு, என்று கால்நடைதுறையினர் தெரிவித்தனர்.

எனவே கலெக்டர்,வருவாய்துறை அதிகாரிகள் மூலம் மாடுகள் இறப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்த உத்தரவிட்டார். இதில், கால்நடை வளர்ப்பவர்களின் பெயர், எத்தனை மாடுகள் உள்ளன. இறந்த மாடுகளின் எண்ணிக்கை, தடுப்பூசிபோட்ட நாள் மற்றும் கால்நடைத்துறையினர் வருகை போன்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டது.இந்த பகுதியில், 150 வீடுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் இருந்து 450 மாடுகளில், 300 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதம் உள்ள, 150 மாடுகளுக்கு தடுப்பூசி போடவில்லை, என்ற தகவல் வெளியானது.

மேலும், கால்நடைத்துறையினர், இது வரை ஏழு மாடுகள் மட்டும் நோய் தாக்கி இறந்துள்ளதாக கூறுகின்றனர். ஆனால், வருவாய்த்துறையினர் ஆய்வில்,நேற்று முன்தினம் வரை 30 மாடுகள் இறந்துள்ளன, என்பது உறுதியானது. கால்நடைத்துறையினர், முறையான தடுப்பு நடவடிக்கைமேற்கொள்ளாமல், தவறான புள்ளி விவரங்கள் கொடுத்து ஏமாற்றியுள்ளது தெரியவந்துள்ளது. இது போன்று, மாவட்டம் முழுவதும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்,என கால்நடை வளர்ப்போர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.கலெக்டர் பழனிச்சாமி கூறுகையில்,"" தடுப்பூசி போடாமல் விடுபட்ட மாடுகளுக்கு, தடுப்பூசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தவறான அறிக்கை குறித்து விசாரணை நடந்து வருகிறது" என்றார்.

### பழநி பகுதியில் கரும்புநெல் நடவு பணிகள் தொய்வு

பழநி : பழநி மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளில் 5,500 ஹெக்டர் பரப்பளவில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்கின்றனர். போதிய மழையில்லாத காரணத்தால் நடவுப்பணியை மேற்கொள்ள தயக்கம் காட்டி வருகின்றனர்.

பழநி-கொடைக்கானல் ரோடு, பாலசமுத்திரம், தொப்பம்பட்டி, பாப்பம்பட்டி பகுதிகளில் மழையை நம்பி, ஏராளமான விவசாயிகள் முதல் கட்ட நடவுப்பணிகளை துவக்கியுள்ளனர். போதிய மழையில்லாததால் குளங்கள் வற்றியும், கிணறுகளில் தண்ணீர் மிகவும் குறைவாக உள்ளது. அடிக்கடி ஏற்படும் மின்தடையால் இறவை பாசனமும் செய்யமுடியவில்லை. விளைச்சலுக்கு தேவையான தண்ணீர், வயலுக்கு பாயச்ச முடியாத காரணத்தால், வளரும்பருவத்திலேயே நெற் பயிர்கள் கருகி வீணாகிவிடும் என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர். சின்னகாந்திபுரம் விவசாயி துரைச்சாமி கூறுகையில்,"" எனது 40 ஏக்கர் நிலத்தில், நெல், கரும்பு பயிரிடுவோம். இவற்றின் விளைச்சலுக்கு நிறைய தண்ணீர் தேவைப்படுகிறது. எதிர்பார்த்த அளவிற்கு மழை பெய்யவில்லை. இருப்பினும் கார்த்திகை மழையை நம்பி, கரும்பு நடவு பணியை மேற்கொண்டுள்ளேன். குளங்கள் முற்றிலும் வற்றியுள்ளது மழைபெய்யவில்லை, எனில் பெருத்த நஷ்டம் ஏற்படும்," என்றார்.

### பருவ மழை பொய்த்ததால் அணைகள் நீர்மட்டம் குறைகிறது

பழநி : பழநி வட்டாரத்தில் தொடர் மழை இல்லாததால், பாலாறு பொருந்தலாறு, வரதமாநதி அணை உட்பட ஆறு அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.பாலாறுபொருந்தலாறு அணைக்கு வினாடிக்கு 7 கனஅடிநீர்வரத்து உள்ளது. 7 கன அடி நீர் குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 36 அடியாக உள்ளது(மொத்தம் 65 அடி). குதிரையாறு அணையில் 6 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 48.92 அடியாக உள்ளது(மொத்தம் 80 அடி).வரதமாநதி அணையில் 10 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்றப்படுகிறது. தற்போதைய நீர்மட்டம் 56.40 அடியாக உள்ளது(மொத்தம் 67 அடி). பரப்பலாறு அணை நீர்மட்டம் 44.66 அடியாக உள்ளது(மொத்தம் 90 அடி). நங்காஞ்சியாறு ஆறு அணையின் நீர்மட்டம் 16.70 அடியாக உள்ளது(மொத்தம் 40 அடி). கொடகனாறு அணையில் நீர்மட்டம் 4.23 அடி (மொத்தம் 27.4 அடி).பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர்

கூறுகையில்,""கொடைக்கானலில் தொடர் மழை பெய்ந்தால், வரதமாநதி அணைக்கு தண்ணீர் வர வாய்ப்புள்ளது. பாலாறு பொருந்தலாற்றில் இருந்து குடிநீர் தேவைக்காக, தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மழையில்லததால், அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது," என்றார்.

## கடைமடை விவசாயத்தை காக்க சீரான மின்சாரம்: கலெக்டரிடம் தி.மு.க., மனு

தஞ்சாவூர்: "கடைமடை பகுதிகளில் விவசாயத்தை காக்கும் வகையில், சீரான மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்' என, தஞ்சை கலெக்டருக்கு தி.மு.க., விவசாய அணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சை மாவட்ட தி.மு.க., விவசாய அணி அமைப்பாளர் செல்வம் தலைமையில், அணி நிர்வாகிகள் தஞ்சை கலெக்டர் சுப்பையனிடம் கோரிக்கை மனு ஒன்றை கொடுத்தனர். அம்மனுவில் கூறியிருப்பதாவது:

தஞ்சை மாவட்டம் முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுகிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பத்து மணி நேர மின்வெட்டு காரணமாக, பருவமழை சீராக பெய்யாததாலும், கடைமடை விவசாயிகள், பாசனத்துக்கு போதிய தண்ணீரின்றி தவிக்கின்றனர். அதனால், தற்போதைய சூழலில், சம்பா பயிர்களை காப்பாற்ற வழிவகை காண வேண்டும்.

புதிய கட்டளை உயர்மட்ட கால்வாய் மற்றும் உய்யக்கொண்டான் விஸ்தரிப்பு கால்வாய்களின் மூலம், செங்கிப்பட்டி, பூதலூர் சுற்றுவட்டார பகுதிகளில், 75க்கும் மேற்பட்ட ஏரிகளின் மூலம், 20 ஆயிரம் ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு வறட்சியால், 20 ஏக்கர்களில் சாகுபடி செய்ய முடியாமல், நிலங்கள் தரிசாக கிடந்தன. தொடர்ந்து வறட்சி காரணமாக, இப்பகுதி விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். அதனால் நஷ்டத்தில் தவிக்கும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். நடப்பாண்டு தண்ணீர் போதிய அளவு கிடைக்குமா? எனும் அச்சத்தில், விவசாய பணிகள் துவங்கியுள்ளன.

இத்தகைய சூழலில், சாகுபடி பணிகளுக்கு தொடர்ந்து, முழுமையாக தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் கடந்த சில நாட்களாக

கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவி வருகிறது. இதனால் பால் உற்பத்தியில், 10 சதவீதம் குறைந்து விட்டது. நோயால் கால்நடைகளை இழந்த, விவசாயிகளுக்கு உரிய நிவாரணமாக மாட்டுக்கு தலா, 30 ஆயிரம் ரூபாயும், ஆட்டுக்கு, மூவாயிரம் ரூபாயும் வழங்க வேண்டும். மேலும், கால்நடைகளை மேலும் நோய் தாக்காமல் இருக்க, போர்க்கால அடிப்படையில் சிறப்பு முகாம் நடத்தி, தடுப்பு பணிகளை முடுக்கி விட வேண்டும்.

## புறம்போக்கில் உலர்களம், கிடங்கு அமைக்கலாம்: வேளாண் அதிகாரி

தஞ்சாவூர்: ""புறம்போக்கு நிலத்தில் உலர்களம், கிடங்குகளை அமைக்க, பஞ்., சார்பில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்யலாம்," என தஞ்சை வேளாண் வணிக துணை இயக்குனர் கலியராஜ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

தஞ்சை மாவட்டத்திலுள்ள பஞ்., தலைவர்கள், தத்தமது கிராம மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில், உலர்களம் மற்றும் ஊரக கிடங்குகளை அமைக்க, அரசு புறம்போக்கு நிலத்தை தேர்வு செய்து, தெரிவிக்கலாம். புறம்போக்கு நிலம் எனும் வகைப்பாட்டில், புன்செய் தரிசு, நன்செய் தரிசு, மண்களம் ஆகிய நிலம் மட்டுமே தகுதியானவை.

நீர்நிலை புறம்போக்கு, கோவில் நிலம் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். அரசு புறம்போக்கு நிலம் தங்களது கிராமத்தில் இருந்தால், அதற்கான புல எண், "அ' பதிவேடு நகல், நில வரைபடம், நான்கு எல்லைகளின் விபரம் ஆகியவற்றை வி.ஏ.ஓ.,விடம் இருந்து பெற்று, மேற்கண்ட நிலத்தில் உலர்களம் அல்லது ஊரக கிடங்கு கட்ட, பஞ்., கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் நகலுடன் வேளாண் வணிக துணை இயக்குனர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகம், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சை எனும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேலும், 04362-256628 எனும் டெலிஃபோன் எண்ணில் தொடர்பு கொண்டு மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

உலர்களம் அல்லது ஊரக கிடங்கு அமைக்க குறைபட்சம், 10 சென்ட் நிலம் அவசியம். நல்ல சாலை இணைப்புடன் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்த தகுந்த வகையில், இடம் அமைந்திருக்க வேண்டும். இவ்வாறு இடத்தை தேர்வு செய்து, உரிய ஆவணங்களுடன் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், மாவட்ட கலெக்டரின் முன் நுழைவு அனுமதி பெற அனுப்பி வைக்கப்படும்.
இத்தகைய அனுமதியை பெற்றவுடன், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், நிதியுதவி பெற்று, கட்டுமான பணிகள், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் துவங்கப்படும். எனவே, பஞ்., தலைவர்கள் மேற்கண்ட வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளலாம்.

## பயிர் விதைகள் தரம் அறிய மாதிரி பரிசோதனை அவசியம்: அதிகாரி

தஞ்சாவூர்: "பயிர் விதைகளின் தரம் அறிய, விதை மாதிரிகளை, விவசாயிகள் அவசியம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்' என, தஞ்சை விதைப்பரிசோதனை மைய அலுவலர் காயத்ரி தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:
தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள், தங்களிடம் உள்ள விதைகளின் தரத்தை உறுதி செய்ய, பயிர் விதை மாதிரிகளை அனுப்பி பரிசோதனை செய்து, விதைப்பு அல்லது விற்பனை செய்ய வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட அளவு மாதிரிகளுடன் மாதிரிப்படிவம் அனுப்ப வேண்டும்.
மாதிரி படிவத்தில் பயிரின் பெயர், ரகம், குவியல் எண் ஆகியவற்றை தவறாமல் குறிப்பிட வேண்டும். மாதிரிகளுடன் அனுப்பப்படும் முகப்பு கடிதத்தில், என்னென்ன பரிசோதனை தேவை, தவறாமல் குறிக்க வேண்டும். மேலும், பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒவ்வொரு விதை மாதிரிக்கும், 30 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். முழு பரிசோதனைக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு மாதிரி அனுப்ப வேண்டும்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 02.12.2013

### கேரள அன்னாசி பழம் சேலத்தில் குவிப்பு



சேலம்: கேரளாவில், அன்னாசிபழம் அறுவடை சீசன் துவங்கியுள்ளதால், சேலம் மார்க்கெட்டிற்கு அதிக அளவில் அன்னாசி பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. தென்னிந்தியாவில் கேரள மற்றும் தமிழகத்தில் கொல்லிமலையிலும் அன்னாசி பழம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. டிசம்பர் மாதம் முதல் அன்னாசி பழம் அறுவடை சீசன் துவங்கும். தொடர்ந்து இரண்டு மாதம் வரை அறுவடை செய்யப்படும்.கேரளாவில் அறுவடை துவங்கியதும் சேலத்துக்கு அதிக அளவில் அன்னாசி விற்பனைக்கு கொண்டு வரப்படுவது வழக்கம்.

தற்போது அங்கு சீசன் துவங்கியுள்ளதால், சேலம் மார்க்கெட்டிற்கு 5 டன் அளவிற்கு அன்னாசி பழங்கள் கேரளாவில் இருந்து லாரி மூலம் வந்ததுள்ளது. ஒரு கிலோ ரூ.20க்கு விற்கப்படுகிறது.இது குறித்து பழ வியாபாரிகள் கூறுகையில், ‘‘கேரளாவில் அன்னாசி அறுவடை சீசன் தொடங்கியுள்ளது. சேலத்திற்கு 2 நாட்களுக்கு ஒரு முறை 5 டன் அன்னாசி பழம் விற்பனைக்கு வருகிறது. பனிக்காலத்தில் சாப்பிட ஏற்ற பழமாக அன்னாசி உள்ளது. விலையேற்றம் இருந்தாலும் வாடிக்கையாளர்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

கொல்லிமலையில் வரும் மே மாதம் அன்னாசி பழம் அறுவடை சீசன் துவங்கும்’ என்றனர்.

**விருதுநகர் மார்க்கெட் பாசிப்பருப்பு மூட்டைக்கு ரூ.200 உயர்வு**



விருதுநகர்: இருப்பு குறைவால் பாசிப்பருப்பு மூட்டைக்கு ரூ.200 விலை உயர்ந்துள்ளது. மல்லி விலையும் மூட்டைக்கு ரூ.100 அதிகரித்துள்ளது. ஆந்திரா, வடமாநிலங்களில் பெய்த மழையால் பாசிப்பயறு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகைக்கு தமிழகத்திற்கு மட்டும் 3 ஆயிரம் டன் பாசிப் பருப்பு தேவைப்படும். இந்நிலையில் இருப்பு குறைவாக உள்ளதால் பாசிப்பருப்பின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த வாரம் பாசிப்பருப்பு மூட்டைக்கு ரூ.200 உயர்ந்துள்ளது.

பாசிப்பயறு ரூ.6,800ல் இருந்து ரூ.7,000, உடைப்பு பாசிப்பயறு ரூ.6,500ல் இருந்து ரூ.6,700, அவியல் பாசிப்பயறு ரூ.7,800ல் இருந்து ரூ.8,000, பாசிப்பருப்பு லயன் ரூ.9,000ல் இருந்து ரூ.9,200, உடைப்பு பாசிப்பருப்பு ரூ.8,500ல் இருந்து ரூ.8,700 என உயர்ந்துள்ளது. லோக்கல் மல்லி வரத்து இல்லாத நிலையில் ராஜஸ்தான் மல்லி வரத்தும் குறைவாக இருப்பதால் மல்லி (40 கிலோ) மூட்டை ரூ.3,100ல் இருந்து ரூ.3,200 ஆக உயர்ந்துள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 02.12.2013

### திண்டுக்கல் மாவட்டத்தில் பரவலான மழை விவசாயிகள் மகிழ்ச்சி



திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று பரவலான மழை பெய்தது.

சாரல் மழை

திண்டுக்கல்லில் நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பகலில் வெயிலின் தாக்கம் குறைந்து இருந்தது. இந்நிலையில் மாலையில் குளிர்ந்த காற்று வீசியது. இதனை தொடர்ந்து இரவு 8 மணியளவில் சாரல் மழை பெய்தது. இந்த மழை சுமார் 1 மணி நேரம் நீடித்தது.

பின்னர் 9.30 மணியளவில் மீண்டும் சாரல் மழை சிறிது நேரம் பெய்தது. இதனால் சாலை ஓரங்களில் மழைநீர் ஆங்காங்கே தேங்கி நின்றது. இந்த சாரல் மழையால் இரவு முழுவதும் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது.

பழனி அருகே

இதே போல் மாவட்டத்தில் கொடைக்கானல், கொடைரோடு, மெட்டூர், சிலுக்குவார்பட்டி, நிலக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் லேசான சாரல் மழை பெய்தது. பழனி அருகே மேற்குதொடர்ச்சி மலையடிவாரத்தில் வடகாடு மலைப்பகுதி உள்ளது. இந்த பகுதியைச் சுற்றி 14 மலைக்கிராமங்கள் உள்ளது. இங்கு உள்ளவர்களில் பெரும்பாலானோர் விவசாயம் செய்து வருகின்றனர்.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

தென்னை, வாழை மட்டுமில்லாமல் காலிபிளவர், பீன்சு, மக்காச்சோளம் போன்ற பயிர்களும் அதிகமாக பயிரிட்டுள்ளனர். இவை அனைத்தும் கிணறு மூலமாகவும் மழையை நம்பியுமே பயிரிட்டு வருகின்றனர். கடந்த சில வாரமாக மழையில்லாததால் பயிர்கள் அனைத்தும் கருகும் நிலையில் இருந்தது. இதனால் விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று மாலையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இரவு 9.20 மணி முதல் மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழை சுமார் 40 நிமிடங்கள் நீடித்தது. மலைப்பகுதியில் பெய்த பலத்த மழையினால் பரப்பலாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நீலகிரி, போதிய விலை கிடைத்து வருவதால் கேரட் பயிரிட ஆர்வம் காட்டும் குன்னூர் விவசாயிகள்**



குன்னூரில், விவசாயி ஒருவர் தனது விளை நிலத்தில் கேரட் பயிரிட நிலத்தை சமன் செய்யும் பணியில் ஈடுபட்டு உள்ளதை படத்தில் காணலாம்.

குன்னூர்,

கேரட்டுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிக ளில் உள்ள விவசாயிகள் தற்போது கேரட் பயிர் களை பயிரிட்டு உள்ள னர்.

**<u>மலைத் தோட்ட காய்கறிகள்</u>**

நீலகிரி மாவட்டம் குளிர் பிரதேசமாக இருப்பதால் மலைதோட்ட காய்கறிகளான உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட் ரூட், முட்டைகோஸ், கேரட், நூல்கோல், காலி பிளவர் உள்ளிட்ட பல்வேறு காய் கறி கள் அதிகளவில் விளைவிக்கப் படுகிறது.

இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகள் தமிழ்நாடு முழுவ தும் ஏற்றுமதி செய்யப்படுவ துடன், கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்க ளுக்கும் அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**<u>மகசூல் அளிக்கும் கேரட்</u>**

குன்னூர் பகுதியில் வெலிங் டன், சின்ன வண்டி சோலை, கே.பி.லைன், ஜெகதளா கிடங்கு, லூர்து புரம் போன்ற பல்வேறு பகுதிகளில் கேரட் விவசாயம் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து விவசாயி குரு மூர்த்தி கூறியதாவது:-

நீலகிரி மாவட்டத்தின் தற் போதைய சீதோஷ்ண நிலை யில் கேரட் பயிரிட்டால் நல்ல மகசூல் அளிக்கும். ஒரு ஏக்கராவிற்கு சுமார் 10 பாக் கெட் விதைகள் பிடிக்கும். முதலில் நிலத்தை சமன் செய்த பின்னர் மேடு அமைத்து ரேக் போட்டு கேரட் விதைகளை தூவ வேண்டும். அதன் பின் னர் கால நிலைக்கு ஏற்றவாறு தண்ணீர், மருந்து மற்றும் உரம் தெளிக்க வேண்டும்.


**<u>மானிய விலையில் விதைகள் வழங்க வேண்டும்</u>**

கேரட்டுக்கு தற்போது நல்ல விலை கிடைத்து வருவதால் ஏராளமான விவசாயிகள் கேரட் பயிர்களை பயிரி தங்க ளுடைய விலை நிலங்களை சமன் படுத்தும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். தற்போது கேரட் பயிரிட்டால் மார்ச் மாதத்தில் அறுவடை செய்ய லாம். விவசாயிகளின் நலனுக் காக தமிழக அரசு மானிய விலையில் பல்வேறு விதை களை வழங்கி வருகிறது. ஆனால், மானிய விதைகள் சிறு விவசாயிகளான எங்க ளுக்கு கிடைப்பதில்லை.

5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்து உள்ளவர்களுக்கே மானிய விலையில் விதைகள் கிடைக்கிறது. எனவே, சிறு, குறு விவசாயிகளுக்கும் மானிய விலையில் காய்கறி விதைகளை வழங்க சம்பந்தப் பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

**வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுநிலை நீடிப்பு தமிழகத்தில் இன்று அநேக இடங்களில் மழைபெய்ய வாய்ப்பு வானிலை மையம் தகவல்**



சென்னை,

தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுநிலை தொடர்ந்து நீடிக்கிறது. இதனால் தமிழகத்தில் இன்று (திங்கட்கிழமை) அநேக இடங்களில் மழைபெய்யும் என்று வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

<u>காற்றழுத்த தாழ்வுநிலை</u>

இலங்கை மற்றும் தமிழக கடற்கரையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மழைபெய்துள்ளது.

மிக அதிகமாக திருச்செந்தூரில் 11 செ.மீ பதிவாகியுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வுநிலை தொடர்ந்து அதே இடத்தில் நீடிக்கிறது.

புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி

இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று (திங்கட்கிழமை) அநேக இடங்களில் மழைபெய்யும். மேலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவும் வாய்ப்பு இருக்கிறது. சென்னையை பொறுத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அவ்வப்போது மழைபெய்ய வாய்ப்பு இருக்கிறது.

இப்போது உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை தவிர, புதிதாக தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது எவ்வாறு செயல்படும் என்று வரும் நாட்களில் கண்காணிக்கப்படும்.

இவ்வாறு இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

மழை அளவு

திருச்செந்தூரில் 11 செ.மீ, ராமநாதபுரம் 6 செ.மீ, சாத்தான்குளம் 5 செ.மீ, மகாபலிபுரம் 4 செ.மீ, சீர்காழி, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, ஏற்காடு, கேளப்பாக்கம், மடுக்கூர் தலா 3 செ.மீ, பட்டுக்கோட்டை, பாம்பன், கல்பாக்கம், ஆர்.எஸ்.மங்கலம், மணமேல்குடி, கடலடி, கந்தர்வக்கோட்டை, கமுதி, நாங்குநேரி, காரைக்கால், உத்திரமேரூர், கொள்ளிடம் தலா 2 செ.மீ, ராமேஸ்வரம், பண்ருட்டி, பாபநாசம், ராதாபுரம், பாளையங்கோட்டை, தூத்துக்குடி, ஆடுதுறை, நாகப்பட்டினம், ஒட்டப்பிடாரம், திருச்சுழி, சிதம்பரம், மாதவரம், சூரங்குடி, தொண்டி, பரமக்குடி, மணிமுத்தாறு, பெருங்களூர், முதுகுளத்தூர், ஸ்ரீவைகுண்டம், கன்னியாகுமரி, நெய்வேலி, காட்டுமன்னார் கோவில், திருவையாறு, விளாத்திகுளம், பூதப்பாண்டி, பரங்கிப்பேட்டை, சிவகங்கை, வல்லம், எண்ணூர், சேத்தியாதோப்பு, திருவாடானை, அதிராம்பட்டினம், மயிலாடுதுறை, ஓமலூர், மயிலாடி தலா 1 செ.மீ மழை பெய்துள்ளது.

<u>சென்னை</u>

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று மழை பெய்தது. பகல் முழுவதும் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது.

**விலைவாசி உயர்வால் சத்தான உணவு பொருள்கள் விற்பனை 40 சதவீதம் சரிவு**

புதுடெல்லி,

விலைவாசி உயர்வு காரணமாக பால், காய்கறி, பழங்கள் ஆகிய சத்தான உணவு பொருள்கள் விற்பனை 40 சதவீதம் சரிவடைந்துள்ளது என அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது.

அசோசெம் அமைப்பு கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, ஐதராபாத், பூனா மற்றும் சண்டிகார் உள்ளிட்ட பல்வேறு பெரிய நகரங்களில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இதில் 2,000 இல்லத்தரசிகள் மற்றும் 1000 அலுவலக பணியாளர்கள் பங்கேற்றனர். இதில் நடுத்தர வர்க்கத்திற்கும் சற்று கீழ் நிலையில் உள்ளவர்களில் 72 சதவீதத்தினர் விலைவாசி உயர்வால் சத்தான உணவுப் பொருள்களுக்கான செலவினத்தை கணிசமாக குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளனர். மாத சம்பளத்தை நம்பியிருக்கும் குடும்பங்களில் 62 சதவீதத்தினர் காய்கறி, பழங்களுக்காக ரூ.4,000 முதல் ரூ.6,000 வரை செலவிட வேண்டியிருப்பதாகவும், 5 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த செலவினம் இதில் 25 சதவீத அளவிற்கே இருந்தது என்றும் கூறியுள்ளனர்.

அக்டோபர் மாதத்தில் பொது பணவீக்கம் 7 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது முந்தைய எட்டு மாதங்களில் இல்லாத அளவிற்கு அதிகரிப்பாகும். எரிபொருள், உணவு மற்றும் உற்பத்தி பொருள்களின் விலை உயர்வால் பணவீக்கம் இந்த அளவிற்கு உயர்ந்ததாக அரசுப் புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.

**வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி ரூ.2.32 லட்சம் கோடி சரத் பவார் தகவல்**



புதுடெல்லி,

நடப்பு நிதி ஆண்டில் இதுவரை ரூ.2.32 லட்சம் கோடிக்கு வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதியாகி உள்ளதாக மத்திய விவசாய துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

120 கோடி மக்களின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்த பிறகு, தானிய கிடங்குகள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் நிலையிலும் ஏற்றுமதி இந்த அளவிற்கு உயர்ந்துள்ளதற்காக அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இந்தப் பெருமை விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் மாநில அரசுகளையே சாரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிக்கிம் மாநிலத்தில் ரானிபூல் அருகில் வேளாண் பொறியியல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட சரத் பவார் இவ்வாறு கூறினார். இந்தியா இன்று பால், பருப்பு, சணல் உற்பத்தியில் முதலிடத்திலும், அரிசி, கோதுமை, கரும்பு, நிலக்கடலை, காய்கறி மற்றும் பருத்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

**விழுப்புரம், உளுந்தூர்பேட்டை பகுதியில் திருந்திய நெல்சாகுபடி பயிர்கள் வேளாண் துணை இயக்குனர் ஆய்வு**



உளுந்தூர்பேட்டை தாலுகா ஒலையனூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி திட்ட நெற் பயிர்களை விழுப்புரம் துணை வேளாண் இயக்குனர் ரத்தினசபாபதி நேரில் ஆய்வு செய்தபோது எடுத்த படம்.

உளுந்தூர்பேட்டை,

உளுந்தூர்பேட்டை பகுதி களில் திருந்திய நெல் சாகுபடி பயிர் களை வேளாண் இணை இயக்குனர் பார்வை யிட்டு ஆய்வு செய்தார்.

<u>திருந்திய நெல் சாகுபடி</u>

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை தாலு காவில் உள்ள மூலசமுத்திரம், கணையார், ஒலையனூர் ஆகிய கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இந்த சாகுபடி நெற்பயிர்களை விழுப்புரம் வேளாண் துணை இயக்குனர் ரத்தினசபாபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் காலத்திற்கு ஏற்ப பூச்சிக்கொல்லி, உரம் ஆகியவற்றை பயன்படுத்தி வேளாண் துறை அதிகாரி களின் ஆலோசனையின் பேரில் சிறப்பான முறையில் அறுவடை செய்து அதிக லாபம் பெற வேண்டுமென விவசாயிகளை கேட்டுக் கொண்டார். இந்த ஆய்வின் போது உளுந்தூர்பேட்டை உதவி வேளாண் அலுவலர் கருணாநிதி, துணை அலுவலர் அலெக்சாண்டர், விரிவாக்க அலுவலர் காமராஜ், உதவி வேளாண் அலுவலர் அந் தோணிசாமி, தொழில்நுட்ப பயிற்சி அலுவலர் செந் தாமரைச் செல்வன் உட்பட பலர் உடனிருந்தனர்.

**கோமாரி நோய் தடுப்பு சிறப்பு கிராம சபை கூட்டம்**



திருவரங்குளம் ஒன்றியத்தில் கோமாரி நோயை தடுக்க வீடுகள் தோறும் கோமாரி நோய் தடுப்பு மருந்துகளை தெளிக்க வேண்டும் என்று கிராமசபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கிராம சபை கூட்டம்**

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 48 ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. பரவி வரும் கோமாரி நோயை தடுத்திடவும், டெங்கு காய்ச்சலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், மாவட்ட கலெக்டரின் உத்தரவின் பேரில் ஊராட்சி ஒன்றிய ஆணையர் செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) நாகம்மை ஆகியோரின் வேண்டுகோளின்படி இந்த கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அந்தந்த ஊராட்சி மன்ற தலைவர்கள் தலைமை தாங்கினர். இதில் கைக்குறிச்சி ஊராட்சியில் தலைவர் செல்வம், வல்லத் திராகோட்டை ஊராட்சியில் தலைவர் கணேசன், கத்தக் குறிச்சி ஊராட்சியில் தலைவர் சுப்பிரமணியன், கொத்தக் கோட்டை ஊராட்சியில் தலைவர் மயிலன், கே.வி. கோட்டை ஊராட்சியில் தலைவர் மோகன், மாஞ்சன்விடுதி ஊராட்சியில் தலைவர் தீபா ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் கிராம சபை கூட்டம் நடந்தது.

**தீர்மானங்கள்**

வேப்பங்குடி ஊராட்சியில் தலைவர் சுந்தரம்பாள் மெய்யர், திருக்கட்டளை ஊராட்சியில் தலைவர் பாக்யம் சுந்தரம், பூவரசகுடி ஊராட்சியில் தலைவர் அருணாசலம், மணியம் பல்லம் ஊராட்சியில் தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையிலும் கூட்டம் நடந்தது.

இந்த கூட்டத்தில் கால் நடைகளுக்கு பரவி வரும் கோமாரி நோயை தடுக்க தடுப்பு மருந்துகளை வீடுகள் தோறும் தெளிக்கவும், டெங்கு கொசு ஒழிப்பு பணியை தீவிரப்படுத்திடவும் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. இதில் ஊராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வேரழுகல் நோய் தாக்கி பருத்தி பயிர்கள் சேதம் விவசாயிகள் வேதனை**



வேப்பந்தட்டை தாலுகா பகுதியில் வேரழுகல் நோய் தாக்கி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி செடிகள் சேத மடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் மிகுந்த வேதனை யடைந்துள்ளனர்.

<u>பருத்தி சாகுபடி</u>

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா பகுதியில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் மானாவாரி நிலத்தில் பயிரிட்டு அதன் மூலம் கிடைக்க கூடிய வருவாயை நம்பி வாழ்ந்து வருகின்றனர். அதாவது மானாவாரி நிலத்தில் மழையை நம்பி பருத்தி, மக்காசோளம், நில கடலை, பூசணி போன்ற பயிர்களை விவசாயிகள் பயிரிடுவது வழக்கம்.

குறிப்பாக பணப்பயிரான பருத்தியை அதிகளவு விவசாயிகள் பயிரிடுவார்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண ரக பருத்தி விதை களை கொண்டு பயிர் செய்த போது பல்வேறு விதமான நோய் தாக்கியும், அதனை கட்டுப்படுத்த

அதிகளவில் பூச்சிகொல்லி மருந்து தெளித்தும் உற்பத்தி செலவு அதிகரித்து விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். இதனால் சில வருடங்கள் பருத்தி பயிரிடுவதை கைவிட்டனர்.

அதன்பிறகு நவீன ரக பி.டி. தொழில்நுட்பத்தில் உருவான பருத்தி விதைகளைக்கொண்டு பயிரிட்டு பயனடைந்து வந்தனர். இந்நிலையில் கடந்த ஆண்டு போதிய மழையில்லாமல் பயிர்செய்த அனைத்து விவசாயிகளும் பெரும் நஷ்டம் அடைந்தனர்.

**<u>வேரழுகல் நோய்</u>**

இந்த ஆண்டு ஆடி மாதத்தில் நல்ல மழை பெய்ததால் விவசாயிகள் தொடர்ந்து நல்ல மழை பெய்யும் என எண்ணி அதிக அளவில் பருத்தி பயிரிட்டனர். ஆனால் தேவையான நேரத்தில் மழை பெய்யாமல் காலம் கடந்து மழைபெய்தது. பொதுவாக அதிகளவு மழை பெய்து பயிர் செய்துள்ள நிலங்களில் வடிகால் இல்லாமல் தொடர்ந்து நீர் தேங்கி நின்றால் மட்டுமே வேரழுகல் நோய் தாக்கி பயிர் பாதிப்பு ஏற்படும்.

இருப்பினும் இந்த ஆண்டு மழை குறைவாக பெய்த போதும், வயல்களில் நீர் தேங்கி நிற்காமல் இருந்த போதும் ஒரு விதமான வைரஸ் மூலம் பருத்தி செடிகள் முழுவதும் வேரழுகல் நோய் தாக்கி பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அதாவது வேப்பந்தட்டை தாலுகாவில் பருத்தி பயிரிட்டுள்ள 90 சதவீத விவசாய நிலங்களில் வேரழுகல் நோய் தாக்கி பருத்தி பயிர் முழுவதும் அழுகிய நிலையில் சேதமடைந்துள்ளது. இதனால் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

**<u>நிவாரணம் வழங்க கோரிக்கை</u>**

எனவே பருத்தி சாகுபடி செய்துள்ள நிலங்களை கணக் கீடு செய்து விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரண உதவி வழங்க தமிழக முதல்–அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட பொறுப்பாளர் வி.ஜெயராமன் கோரிக்கை விடுத்துள்ளார்.